www.tamilarangam.net

# தேடல்



மார்கழி 1989(தேடல் 3)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# தேடகம்

## வகைதுறை வளநிலையம்

இந்தியா, இலங்கையில் இருந்து
புதிய பத்திரிகைகள், சஞ்சிகைகள்
தருவிக்கப்படுகின்றன.

கலை இலக்கிய மன்றம்
566 பாராளுமன்ற வீதி
ரொறன்ரோ

---

## தேடல்

தேடல் பற்றிய சகல தொடர்புகளுக்கும்

**THEDAL**
**566 PARLIAMENT ST**
**TORONOTO, ONT**
**M4X 1P8**
**CANADA**

தேடல்

---

வார இதழ்

தாயகம்

இது ஒரு ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவன வெளியீடு

www.tamilarangam.net

கலை இலக்கிய மன்ற வெளியீடு

# தேடலுக்காய்...

மார்கழி 1989


☆ என்னதான் முடிவு.......

ஆசிரியர் குழு

☆ உலகம் பொதுவுங்க

சகாப்தன்

☆ ஒரு கணம்

பா.அ.ஜயகரன்

☆ மீட்சிக்கு வழி

என்.எ.ரஞ்சித்

☆ வரைமொழி உடன்படிக்கை

தியாகோ டி மெல்லோ

☆ தமிழினத்தை தாக்குவதில்.....

சம்பு

☆ எதிரிக்கு கொண்டாட்டம்

சங்கரி

☆ ஒரு "துரோகியின்" இறுதிக்கணங்கள்

ஜோர்ஜ்.இ.குருஷேவ்

☆ கமோன் ஸ்ரீ லங்கா

கோவை நைதன்

☆ கோளறுப் பதிகம்

☆ நாட்குறிப்பிலிருந்து.......

செழியன்

☆ மக்கள் விடுதலை முன்னணியும்....(3)

☆ ஈழத்திலிருந்து.......

கடிதம்

☆ வாசகரிடமிருந்து....

☆ ஓவியர் மாற்கு பற்றி....

அலையிலிருந்து.

☆ அட்டைப்படம்

ஓவியர் மாற்கு




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்னதான் முடிவு....................?

மனித மேம்பாட்டிற்கான போராட்டம் எங்கோ சிக்கித் தவித்துக்கொண்டு இருக்கிறது.எமது மண்ணின் நடப்புகள் எதுவும் நம்பிக்கை தருவனவாக இல்லை.கடந்தவை மீட்கப்படுதலும்,அடிப்படைத்தன்மை ஆய்வு செய்யப்படுதலும்,ஆய்வின் அடிப்படையில்தெளிவான உடன்பாடு சராசரி மானிடர்களிடம் சென்றடைதலும் மண்ணின் முக்கியதேவையாகவுள்ளது.போராட்டம் என்பது,மானுடம்,நேயம்,இருப்பு என்பவற்றில் நின்றெல்லாம் அகற்றப்பட்டு ஆயுதவலு சார்ந்த குழுக்களினுல் அபகரிக்கப்பட்டு நடைபெறும் செயல்கள், மனிதகுல மேம்பாட்டின் அச்சுறுத்தல்களே ஆகும்.சிந்தனை ஆயுதத்தை வழிநடத்துவதற்கு பதிலாக,ஆயுதம் சிந்தனையை வழிநடத்துவது மனித மேம்பாட்டிற்கான தேவையை உறுதி செய்யப்போவதில்லை.

இதுவரைகாலும் எதிரிகள் என வர்ணிக்கப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை மூலம் ஒரு உடன்பாட்டிற்கு வரமுடியுமெனில்,ஒரே நோக்கிற்காக போராடத் தொடங்கியவர்கள் ஏன் இன்னும் பேச்சுவார்த்தை மூலமாக சுமுகமான முடிவிற்கு வரமுடியாமல் உள்ளனர்.இதன் சூத்திரதாரிகள் யார்?

www.tamilarangam.net

'OSAI'
5 RUE HERMEL
75018 PARIS
FRANCE

தலைமைகளா? அல்லது அவர்களை வழிநடத்துபவர்களா? ஆயுதம் தரித்தவர் போராளிகளாகவும்,மக்கள் என்பது பாவப்பட்ட ஜென்மங்களாகவும்,போராட்டம் என்பது எம்மை நாமேஅழித்தல் என்றும் ஆகிவிட்டது. இனி,நின்று,நிதானித்து ஏன் போராட்டம் தொடங்கினேம் என்பதை சிந்தித்து செயற்படுவது நாகரீகயுகத்திற்கு உகந்ததாக இருக்கும்.

மரணங்கள் மதிப்புள்ளவை,தியாகங்கள் மதிக்கப்படவேண்டியவை.மரணங்கள் என்றும் மனிதனின் தேவையை அழித்துவிடுவதில்லை. மரணம் மனிதனின் கருத்தை உருக்குலைத்து விடுவதில்லை.கருத்துக்கள் என்றும் ஆய்வுக்குரியவை.கருத்துவேறுபாடுகள் விவாதிக்கப்படவேண்டியவை.செயற்பாடுகள்விமர்சிக்கப்பட வேண்டியவை.மனிதன் ஒருவன் வீணே மாய்ந்தான் எனின் மனிதவரலாற்றில் அது நிராகரிக்கப்படும்.மனிதனின் சுதந்திர வாழ்விற்கு இடையூறுகள் தொடரும்வரை வாழ்விற்கான போராட்டம் தொடரவே செய்யும்.

_ஆசிரியர் குழு_


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தேடியது..........

OSAT
5 RUE HERMEL
75018 PARIS
FRANCE

# வரை மொழி உடன்படிக்கை

சலனமற்ற தண்ணீரில் எறிந்த கல் எப்படி சிறு அலைகளையும் பெரும் அலைகளையும் எழுப்புமோ அந்த வண்ணம் ஒரு இலக்கியப்படைப்பு வாசிப்பவனிடத்தில் அலைகளை எழுப்ப வேண்டும். கவிதை மரபில் எழுதப்பட்டாலும் அல்லது புதுக்கவிதை வடிவில் எழுதப்பட்டாலும் அதுகொடுக்கும் தாக்கத்தில் அது நவீனமோ பழமையானதோ எனக் கணிக்கப்படுகின்றது.

கீழே வரும் கவிதை அரசியல் நிர்ணய சட்டம் (கொன்ஸ்ரீயுசன்) எழுதும் விதத்தில் எழுதப்பட்டுள்ளது. யாப்பு வடிவங்களில்தான் கவிதை எழுத வேண்டும் என்பவர்களுக்கு இது வெறும் வசனங்களாகத் தெரியலாம். ஆனால் இன்று தமிழ் நவீனத்தை பல பேர் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ."தியாகோ டி மெல்லோ" என்ற இலத்தீன் அமெரிக்க கவிஞரால் 'பாரிசில்' நடைபெற்ற கவியரங்கொன்றில் வாசிக்கப்பட்டு பெரும் பாராட்டுப் பெற்ற இக்கவிதை தமிழ் கூரியர் (Courier) இதழுக்காக தெசிணியால் மொழிபெயர்க்கப்பட்டது.

***உறுப்பு 1***

*இதுமுதற்கொண்டு உண்மை இருக்கின்றதென்றும்*
*இதுமுதற்கொண்டு வாழ்கை இருக்கின்றதென்றும்*
*கைகோர்த்துக்கொண்டு எல்லோரும் உண்மையாக*
*வாழப்பாடுபடுவதென்றும் முடிவு செய்யப்படுகின்றது.*

***உறுப்பு 2***

*வாரத்தின் ஒவ்வொரு நாளும்*
*மந்தத்திலும் மகாமந்தமான செவ்வாய் கிழமைகள் கூட*
*ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையாக ஆவதற்கு*
*உரிமையுண்டு என்று முடிவு செய்யப்படுகிறது.*

***உறுப்பு 3***

*இந்தக் கணத்திலிருந்தே ஒவ்வொரு சாளரத்திலும்*
*ஞாயிறு நோக்கிப் பூ*
*இருத்தல் வேண்டும்மென்றும்*
*ஒவ்வொரு ஞாயிறுநோக்கிக்கும் சாளரமேற்கட்டில்*
*துளையிருக்கக் கோரும் உரிமையுண்டு என்றும்,"*
*ஒவ்வொரு சாரளமும்,நம்பிக்கை வளர்கின்ற*
*பசும்புல் தரைகளுக்கு,நாள்முழுதும் திறந்திருப்ப-*

www.tamilarangam.net

வைகளாகத் தொடர்ந்திருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்படுகிறது.

உறுப்பு 4

மனிதன் ஒருபோதும் மீண்டும் தன் சகமனிதனை ஐயுறுதல் ஆகாது என்று முடிவு செய்யப்படுகிறது.
பனைமரம்,வீசும் காற்றின் மீதும்;' வீசும் காற்றும்,
காற்று மண்டலத்தின் மீதும்;' காற்று மண்டலம்,
விண்ணின் நீலப்பரப்பின் மீதும் நம்பிக்கை
வைத்திருப்பது போல்,
மனிதன்,மனிதனிடம் நம்பிக்கை வைக்கவேண்டும்.
தனிச்சேர்க்கை:
ஒரு குழந்தை மற்றொன்றிடம் வைத்திருப்பது போல்
மனிதன் மனிதனிடம் நம்பிக்கை வைத்தல் வேண்டும்.

**உறுப்பு 5**

மனிதன் பொய்மையெனும் அடிமைத் தளையிலிருந்து விடுதலை செய்யப்படவேண்டுமென முடிவு செய்யப்படுகிறது.
ஒருபோதும் மீண்டும், மௌனமெனும் மார்புக்கவசமோ
சொற்களின் சங்கிலிமடலோ அவனுக்குத் தேவையில்லை
அவன் விசனமற்ற விழிப்புடன் மேசையில் அமர்வான்.
ஏனெனில்,உணவு முடியுமுன் உண்மை பறிமாறப்படும்.

**உறுப்பு 6**

பத்துநூற்றுண்டுகளுக்கு,கடவுள் சாதாரண
ஈசையாவின் கனவு நிறைவேற்றப்பட வேண்டுமென்று
விதிக்கப்படுகிறது;' அது
ஓநாயும் ஆட்டுக்குட்டியும் ஒன்று சேர்ந்து,இனிய
புதிய விடியலை உட்கொண்டு புல்மேய்தல் வேண்டும்,

**உறுப்பு 7**

நீக்கிடமுடியாத தீர்ப்பாணையால் நிலைநிறுத்தப்பட்ட
நீதி-ஒளி முடிவற்ற ஆட்சி இப்போது தொடங்குதல்
வேண்டும்,பறக்கும் உதாரணக் கொடியாம் மகிழ்ச்சி,
மக்களின் உள்ளத்திற்குள் மிதந்திடல் வேண்டும்.

**உறுப்பு 8**

மனிதகுடும்பத்தின் மிகப்பெரிய துயரம் இவ்வாறுதான்
இருந்திருக்கிறது;இனி எப்போதும் அவ்வாறே
இருத்தல் வேண்டும் என்று முடிவு செய்யப்படுகிறது.

www.tamilarangam.net

அதாவது, நேசிக்கப்பட்டவர்க்கு அன்பைக் கொடுக்க சக்தியில்லாமலிருப்பவனும்,நேசிப்பது;நீரின் கொடை மட்டுமே,மலர் என்னும் அற்புதத்தை செடிக்குக் கொண்டுவரும் என்பதை அறிவது.

**உறுப்பு 9**

தினப்படி உணவு,மனிதனின் வியர்வைத்துளிக்கேற்ப இருத்தல் வேண்டும் என்பது அனுமதிக்கப்படுகிறது. எனினும் இளமென்மைப் பின்சுவையை,அது கணப்புச் சூடாகவே வைத்திருக்க வேண்டுவதே,முதன்மையானதும் எப்போதும் செய்யவேண்டியதுமாகும்.

**உறுப்பு 10**

எவர் வெண்மையுடை உடுத்திக்கொள்வதென்பதோ அவரது வாழ்கையின் எந்தக்கணத்தில் அவ்வாறு அவர் செய்யலாம் என்பதோ முக்கியமன்று என்று முடிவுசெய்யப்படுகிறது.

**உறுப்பு 11**

பொருள்வரையறையின் படியே மனிதன்,நேசிக்கும் பண்பு கொண்ட ஒருபடைப்பு என்று முடிவு செய்யப்படுகிறது. அதனுற்றன் விடிவெள்ளியை விடவும் அவன் அழகில் விஞ்சி நிற்கிறன்.

**உறுப்பு 12**

எதுவும் கட்டாயம் செய்யப்படவேண்டியதாகவோ தடைசெய்யப்பட்டதாகவோ இருத்தல் கூடாது என்று முடிவு செய்யப்படுகிறது.அதிலும் சிறப்பாக, காண்டாமிருகங்களோடு விளையாடுவதும், பொத்தான் துளைகளில் செருகுவதற்காகப் பெரிய அலர் வட்டச்செடியுடன் மாலைவேளைகளில் நடப்பதும் அனுமதிக்கப்பட வேண்டும்.

**தனிச்சேர்க்கை:**

ஒன்று மட்டுமே தவிர்க்கப்பட வேண்டும்:
அன்பில்லாத நேசிப்பு.

**உறுப்பு 13**

வரவிருக்கிற நாட்களின் காலைச்சூரிய வெளிச்சத்தை வாங்குவதற்கு,இனிமேல் பணத்திற்கு சக்தியிருத்தல்

www.tamilarangam.net

*கூடாது என்று முடிவு செய்யப்படுகிறது. அச்சமெனும் ஆயுதச்சாலையிலிருந்து வெளியேறிப் பாடுவதற்கு உரிமையுண்டு என்றும்,புதிதாய் விடிந்த பொழுதுக்கு விருந்துவைக்க உரிமையுண்டு என்றும்,காக்கும் உடன்பிறப்பாண்மைக் கத்தியாய் ஆதல்வேண்டும்.*

***இறுதி உறுப்பு***

***'சுதந்திரம்' எனுஞ்சொல் விலக்கப்படவும் எல்லா அகராதிகளிலிருந்தும் வேண்டப்படாததாக, அகற்றப்படவும்வேண்டும்.***

***பேச்செனும் பயங்கரச் சதுப்பு நிலத்தினின்று தடை செய்யப்படவும் வேண்டும்.***

***இதுமுதற்கொண்டு***

***"சுதந்திரம்"என்பது,நெருப்பைப்போல் அல்லது நீரோடையைப்போல, விதை தானியத்தைப்போல, மனிதனின் இதயத்தில் வாழ்ந்திருக்க வேண்டிய ஒரு தெளிவான உயிர்ப்பொருளாய் இருத்தல் வேண்டும்***

சர்வதேச அரசியலுடனும் இந்து சமுத்திரப் பூகோள அரசியலுடனும் நிபந்தனையற்றுப் பிணைக்கப்பட்டு விட்ட எமது விடுதலை போராட்டம் (இதற்கு நாமும் பங்காளிகள் என்பதை மறந்து விட முடியாது) அரை குறைத்தீர்வுகள் மூலம் அல்லது வல்லரசுப் பின்னணிகளின் விளைவான சமரசங்கள் மூலம் பின்தள்ளப்படுகின்ற அபாயம் இருந்து கொண்டேயிருக்கின்றது.இந்தக் கவிதைகள் காலம் காலமாக நின்று எமது துயரங்களையும் சொல்லில் மாளாத இழப்புக்களையும் மரணத்துள் வாழ்ந்த கதையையும் சொல்லி உலகின் மனச்சாட்சியை அதிர வைத்துக் கொண்டேயிருக்கும்.

அந்த அதிர்வுகள் விடுதலைப் போரின் எத்தகைய பின்தள்ளல்களையும் வெறுப்புடன் பார்த்து கவிதா அனல் உமிழ்ந்து கொண்டேயிருக்கும். நமது விடுதலைக்காக மட்டுமல்ல தென்னாசியாவிற்கே ஒரு விடுதலைப் பொறியை அவை ஒரு நாள் ஏற்றும்.

சேரன் (மரணத்துள் வாழ்வோம் என்னும் நூலின் முன்னுரையில் இருந்து)

**நாடோடி**

www.tamilarangam.net

சிறுகதை

# கமோன் ஸ்ரீ லங்கா!

-கோவை றைதன-

அவனது கண்ணெதிரே ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கூட்டம். அவனும் அந்தக் கூட்டத்தில் ஓர் இரசிகனாய் கிரிக்கெட் விளையாட்டை இரசித்துக் கொண்டிருக்கிறான். முழுவதும் மூடிய விளையாட்டரங்கத்தில் மின் ஒளி வெள்ளத்தில், வீரர்கள் சிறப்பாக விளையாடிக் கொண்டிருந்தனர். ரசிகர்களின் ஆரவாரங்கள், கைதட்டல்கள், கூச்சல்கள் விளையாட்டரங்கை அமர்க்களப்படுத்தியது. அவன் பள்ளிநாட்களில் கிரிக்கெட் விளையாட்டில் சிறந்த வீரனாக இல்லாவிட்டாலும், வகுப்பு மாணவர்களுடன் கன்னை பிரித்து விளையாடியிருக்கின்றான். மாணவர்கள் தாங்கள் பாடசாலைக்கு புத்தகங்கள் கொண்டு செல்லும் சூட்கேசுகளை அடுக்கி விக்கெட்டுகளாக பாவித்து குழு குழுவாக விளையாடிக்கொண்டிருப்பார்கள். அவனும் பெரிய விளையாட்டு வீரனாக வர ஆசைப்பட்டிருக்கிறான். ஆனால் படிக்கின்ற காலங்களில் விளையாடப் போனாலே, வீட்டார் "உனக்கென்னடா விளையாட்டு, புத்தகத்தை எடுத்துப்படியடா" என்று சொல்லியே அவனது விளையாட்டு ஆர்வத்தை குறைத்தாலும், அவனால் கிரிக்கெட் விளையாட்டின் இரசிப்புத்தன்மையை குறைக்க முடியவில்லை.

முன்பெல்லாம் பாடசாலைகளுக்கிடையில் நடக்கின்ற போட்டிகளில் முன்னணி இரசிகனாக பார்வையாளர் வரிசையில் அமர்ந்து பார்வையிடுவான். தனது நண்பர்களுடன் தனது பாடசாலைக்கு ஆரவாரம் செய்து ஆதரவு காட்டுவான். இதனால் முன்பொரு முறை இன்னொரு பாடசாலை வீரர்களை பரிகாசம் செய்து கூச்சல் போட்டு பெற்று மண்டையை உடைத்திருக்கிறான். இப்போதெல்லாம் விளையாட்டின் உன்னதமான நோக்கம் மதிக்கப்படாமல் குழுக்கள், நாடுகளுக்கிடையே பொறாமையால், போட்டியால் அவமானப்படுவது இப்போதய நாகரீகமாயிற்றே!

நாட்டில் இருந்தபோது பார்வையிட்ட கிரிக்கெட் போட்டிகள் இப்போது வெளிநாடுகளில் அகதியாய் வாழ்ந்தபோது கிடைக்காமல் போய்விட்டது. சில வேளைகளில் தொலைக்காட்சியில் பார்த்தாலும் நேரடியாக பார்த்து ரசிக்கும் திருப்தி அவனுக்கு ஏறபடுவதில்லை. நான்கு வருடங்களின் பின் இப்போதுதான் நேரடியாக கிரிக்கெட் விளையாட்டைப்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. வேலைக்குப் போகாமல் இருபது டொலருக்கு ரிக்கற் எடுத்துக் கொண்டு வந்து அமர்ந்திருக்கிறான்.

இப்போது உலக அணியினருக்கும், உலகில் பிரபலமான ஒர் நாட்டிற்கும் இடையே விறுவிறுப்புடன் விளையாட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. உலகக் குழுவில் பலநாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கு பற்றினர். தற்போது உலக அணியினர் எடுத்த ஒட்ட எண்களை விட கூடிய எண்ணிக்கையை பெற உலக அணியினர் பிரயத்தனப் பட்டுக் கொண்டிருந்தனர். எதிரணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் ஒருவீரர் ஆட்டமிழக்க புதிய வீரரொருவர் மைதானத்தின் மத்தியை நோக்கிசென்று கொண்டிருக்கிறார்.

"கமோன் ஸ்ரீலங்கா......"கூடவே அந்த வீரனின் பெயரையும் சொல்லி கூட்டத்தினரிடையே இருந்து சில ஒலிகள் கிளம்ப கரகோசமும் அதனைத் தொடர்ந்தது "ஓ!...எங்கண்ட நாட்டுக்காரன்தான்" அருகில் இருந்த அவனது நண்பனிடம் பரிகாசத்துடன் அவன் கூறினான். அதற்கு நண்பன் "எங்கண்ட நாட்டுக்காரனெண்டு சந்தோஷமாக சொல்லி, கைதட்டி ஆதரவை தெரிவியன் ஏன் முகத்தை சுழிக்கிறாய்" என்றான்.

"இல்லை மச்சான்....உவன் சிங்களவன்.!

"சிங்களவனென்டால் அவன் மனிசனில்லையே!........ ஏன் நீ அவனை எதிரிஎண்டு பார்க்கிறாய்......?"

"என்ன நீ இப்படிச் சொல்லுகிறாய.?. எங்களுக்கு நடக்கிற பிரச்சனையளும், நாங்கள் நாட்டை விட்டு வெளியேறினதும் ஆராலே? எங்கண்ட சனத்துக்கு எவ்வளவு அழிவுகள். இவங்களாலைதானே?"

"அழிவுகளும், அநியாயங்களும் உண்மைதான். மனிதர்களுக்கிடையே இருக்கிற இன, மொழியை வைச்சு இனங்களுக்கிடையே பகையை மூட்டி அரசியல் வாதிகள் தங்களுடைய நன்மைக்காக மனித குலத்திற்கு நிரந்தரமான கறையை ஏற்படுத்தினம். என்ரை அனுபவங்களிலை சிங்களவனும் மனிசன். தமிழனும் மனிசன். மனிதனிலை நல்லவனும் இருக்கிறான், கெட்டவனும் இருக்கிறான். இந்த கெட்டமனிதர்களை இன, மொழி, மதத்தைவைச்சு பிரிச்சுக்காட்டி இனங்களுக்கிடையே பகையை ஏற்படுத்தி அரசியல் வாதிகள்தான் வைச்சிருக்கினம். இதாலைதான் இவ்வளவு அழிவும், அநியாயமும் நடக்கிது".

அவன் எதுவும் பேசாமல் இருந்தான். புதிய வீரன் மைதானத்தின் பிட்சில் போய் நின்று விக்கெட்டுக்களின் முன்னால் நின்று மட்டையை வைத்து விளையாட்டை ஆரம்பிக்கத் தயாரானான். அவனது மனத்தில் பல குழப்பங்கள். அவனது மனத்தில் வழமையான தமிழன், சிங்களவன் என்ற பகைமை உணர்வு வெகு காலமாக இருந்து வருகின்றது. இது ஆச்சரியப்படும் ஒன்றல்ல. அரசியல் லாபத்துக்காகவும், பொருளாதார காரணங்களுக்காகவும் மக்களின் மேல் பகையை வளர்த்துவரும் சிலரால் நாட்டிலே எவ்வளவு பகைமை உணர்வுகள்........அழிவுகள்...... இனங்களுக்கிடையே ஒருமையை வளர்க்க வேண்டிய தலைவர்களாக சொல்லப்படுபவர்கள், வேற்றுமையை வளர்த்து இனவாதச் சேற்றிலே மக்களை வைத்திருந்து, இன்று நாட்டுப்பிரிவினை

www.tamilarangam.net

என்ற நிலைக்கு வந்து மோசமாக மக்களை பகையாளியாக்கினர்.
அவன் நண்பனை பார்த்து கேட்டான்.
."எங்கண்ட தமிழன் ஒருவன் இலங்கைக் குழுவிலை விளையாடுறதெண்டாலே எவ்வளவோ முயற்சி பண்ணித்தான் விளையாடமுடியும். சில வேலைகளிலே எத்தனையோ தமிழ் விளையாட்டு வீரர்களிடம் திறமை இருந்தும் சிங்களவருக்குத தான் முழு சந்தர்ப்பமும் கிடைக்குது. இது மட்டுமே!படிப்பு,உத்தியோகம்,குடியேற்றம் எண்டு எல்லாத்திலும் எங்களை அடிமைப்படுத்தி வைச்சிருக்கிறுங்கள்".
"

"உண்மைதான்,எங்கட இனத்தை, சிங்கள ஏகாதிபத்திய அரசு உரிமைகளை பறிச்சு வைச்சு அடிமைகளாகத்தான் வைச சிருக்கிறது.உண்மைதான்.அதுக்காக நாங்கள் போராடுறதும் நியாயம்தான். அதுக்காக தமிழ் மக்களுக்குத்தான் பிரச்சனை சிங்கள மக்களுக்கு பிரச்சனையில்லை எண்டு நீர் நினைக்கிறது தவறு.தமிழ் மக்களுக்குள்ள பிரச்சனையைப்போல் சிங்கள மக்களுக்கும் பற்பல பிரச்சனைகள்தான். வேலை இல்லாப்பிரச்சனை, கல்விப் பிரச்சனை,வறுமை வாழ்வ, இதுகளெல்லாம் சிங்கள மக்கள் மத்தியிலும் உள்ளன
இதனுல் தான் விரக்தியுற்ற இளைஞர்கள் சிங்களப்பகுதியிலையும் போராட வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறர்கள்".
எமது நாட்டுவீரன் விளையாட்டை ஆரம்பித்து விட்டான். எதிரணியின் வீரன் பந்தை வீசஅதை அடிக்கமுடியாமல் போய்விட்டது. தொடர்ந்து வீசிய ஐந்து பந்துகளிலும் ஒரு ஓட்டத்தை கூட அவனுல் எடுக்கமுடியவில்லை.
"பார்த்தியே உவங்கள் பெரிய ஆக்கள் தான் எங்கண்ட தமிழனென்டால் இவ்வளவுக்கு இருபத்தஞ்சு ஓட்டம் எடுத்திருப்பான்" என்றுன் அவன்.
"மொழிப்பற்று, இனப்பற்று உனக்கு தேவைதான். ஆனுல் அது வெறியாகக்கூடாது. இந்த வெறிதான் எங்கண்ட நாட்டையே முழுவதுமாய் பாதிச்சிருக்கு.."
பந்து வீச்சாளர் வேறெருவராக, துடுப்பாட்டக்காரரும் மாறினுர். பந்துவீசப்பட்ட உலக அணியினரின் துடுப்பாட்டக்காரர் ஒரு புள்ளியை அதிகமாய் பெற துடுப்பெடுத்தாடுவது எமது நாட்டு வீரனுக்கு கிட்டியது.
அவன் எதுவுமே கூறவில்லை மௌனமாய் மைதானத்தை நோக்கியபடி இருந்தான். பச்சைப் புற்கள் போல் செயற்கையாய் விரிப்பு செய்யப்பட்டு தூரத்தூர விளையாட்டு வீரர்கள் நின்றபடி வீரர்கள்விளையாட்டில் முனைப்பாய் நிற்க இரசிகர்களின் ஆவல் மைதானத்தின் மத்தியில் துடுப்பெடுத்தாடும், விளையாட்டு வீரனை நோக்கியிருந்தது.
எதிரணியினர் பந்து வீச நமது நாட்டு வீரனின் மட்டையில் பந்து பட்டு சுழன்றேடி எல்லைக் கோட்டினை தாண்டி நான்கு புள்ளிகளைப்பெற்றது. கரகோஷத்தை தொடர்ந்து வீரனின்முகம் மலர்ந்து முன்னைவிட ஆர்வத்தோடு பந்து வருவதை உன்னிப்பாய் கவனித்தவண்ணம் துடுப்பெடுத்தாடினுன். தொடர்ந்தும் இரண்டு நான்கு ஓட்டங்களைப்பெற்று நமது நாட்டு வீரன் தனது உலக அணிக்கு புள்ளிகளை அதிகரித்துக் கொண்டிருந்தான்.
இரசிகர்கள் ஆரவராமாக கரகோஷம் செய்தனர். பலரது முகத்திலும் மகிழ்ச்சிப் பரவசம் இன்னும் பலரது முகத்தில் கவலை ரேகைகள்.எங்கே தோற்றுவிடுமோ

www.tamilarangam.net

என்ற ஏக்கப்பயம். இரசிகர்களின் எதிர்பார்ப்பு இன்னும் அதிகமாகியது. அவனது முகத்தில் சந்தோஷம் பரவினுலும் ஒரு குழப்பமான மன நிலேயிலேயே இருந்தான். விளேயாட்டின் பால் கவனம் செல்லவில்லே. அவனுக்கு இப்போது ஒன்று மட்டும் தெளிவாக மனத்தில் படர்ந்தது. மனிசன் எல்லோரும் ஒரு இனம்தான். ஆனுல் மதம், மொழி, நிறங்களே வைத்து மனிதனே மனிதன் வேறுபடுத்தி, அது பிரச்சினேகளே உருவாக்கிவிட்டது. இந்த மைதானத்தில் விளேயாடிக் கொன்டிருக்கும் உலக அணியினர் பல்வேறு நிற, மத, இனங்களே கொண்டாலும் ஒற்றுமையை முதன் மைப்படுத்தி ஒருவருக்கொருவர் உறுதியாய் நின்று வெற்றிக்காக விளேயாடிக் கொண்டிருக்கிருர்கள். எமது நாட்டில் இரு இனங்கள் ஏன் ஒற்றுமையாக வாழமுடியாது போய் விட்டது. இதற்கு யார் காரணம்? அவனேச் சிந்திக்க வைத்தது. எமது தமிழ் இனம் மட்டும் ஒற்றுமையாகியுள்ளதா? சாதிச்சன்டை முதல் இனத்துக்காக போராடும் குழுக்கள் வரை எத்தனே பகைமைகள். மனிதனது உணர்வோடு தோன்றி விட்டதா பகைமை. ......? இதை ஒழிக்க முடியாதா......? என்றவாறெல்லாம் அவனது மனம் சென்றது.

தற்போது நாட்டு வீரனது மட்டையில் பந்து பட்டு மேலாகக், கிளம்பி எல்லேக் கோட்டினேத் தாண்டி ஆறுபுள்ளிகளேப் பெற்றது.

இரசிகர்கள் மகிழ்சியால் ஆரவாரித்தனர். கூச்சல்கள் அதிகமானது. விளேயாட்டு முன்னரை விட அதிகக்களே கட்டிவிட்டது.

அவனது கவனமும் விளேயாட்டின் பால் திரும்பியது. நமது நாட்டு வீரனின் விளேயாட்டுத திறமையை எண்ணி மகிழ்ந்தான். "கமோன் ஸ்ரீலங்கா.....!. கமோன் ஸ்ரீலங்கா!" என்ற இரசிகர்களின் ஆரவாரம் அவனேயும் உணர்ச்சிவசப்படச் செய்தது. மனத்தில் உள்ள முன்னேய பகைமை எண்ணங்கள் அற்றுப் போயிருந்தன. இதற்கு நமது நாட்டுவீரனின் திறமையான விளேயாட்டில் ஏற்பட்ட மகிழ்ச்சியோடு, அவனது நண்பன் கூறிய கருத்துக்களும் காரணமாயிருந்தன.

தொடர்ந்து விளேயாடிய எமது நாட்டு வீரன் சிறப்பாக விளேயாடி தனது அணியை வெற்றி நோக்கி நகர்த்திஞன். அவனும் கரகோஷம் செய்து ஆரவாரம் செய்தான். இடை இடையே" கமோன் ஸ்ரீலங்கா" என்றும் கத்திஞன்.

எதிரணியின் பந்து வீச்சுக்கு இப்போது நமது நாட்டு வீரன் ஆட்டத்தை இழந்தான். இரசிகர்களில் பலருக்குக் கவலே, வெற்றியை சமீபக்கையில் ஆட்டத்தை இழக்க வேண்டியதாகி விட்டதே! அவனது முகத்திலும் கவலே....! எனினும் நமது நாட்டு வீரனின் விளேயாட்டினே எல்லோரும் மெச்சினர். இப்போது அவனுக்கு சிங்களவன் என்ற உணர்வு கிடையாது எல்லாம் நம்முடைய சிலரால் ஏற்படுத்தப்பட்ட பகை உணர்வு என்பதை உணர்ந்து விட்டான்.

தொடர்ந்தும் விளேயாடிய உலகஅணி வீரர்கள் சிறப்பாக விளேயாடியும், பிரபலமான நாட்டின் அணி குறைந்தளவு ஓட்ட எண்ணிக்கை வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. எனினும் ரசிகர்கள் மத்தியில் விறுவிறுப்பனதொரு விளேயாட்டைப் பார்த்ததில் பூரணதிருப்தி. அவனது நண்பன் அவனே தேடிஞன். அவன் நமது நாட்டு வீரனே மகிழ்ச்சி பொங்க பல இரசிகர்களோடு சேர்த்து தூக்கிக் கொண்டு ஓடுகின்றுன். "கமோன் ஸ்ரீலங்கா"....... என்று கூறியபடி........ .. !

www.tamilarangam.net

# ஒரு மனிதனின் நாட் குறிப்புகளிலிருந்து..............

*செழியன்*

*எங்கள் தேசத்தில் எத்தனையோ சம்பவங்கள்*
*நடந்து முடிந்து போய்விட்டன. முடிந்து*
*போனவைகளில் இதுவும் ஒன்று.*
*தேசத்தை நேசித்ததனல் தேசத்தில்*
*வாழ மறுக்கப்பட்ட பல நூறு மனிதர்களில்*
*இவனும் ஒருவன். இன்று இவன் தான் வாழ்ந்த*
*தேசத்தை இழந்து, அந்த மண்ணில் வாழ்ந்த*
*நாட்களை இழந்து அந்நிய தெருக்களில்*
*ஒரு நாடோடியாக.......*

மார்கழி 13.

எத்தனையோ நாட்கள் வருகின்றன போகின்றன.சில நாட்கள் மட்டும் எமது வாழ்க்கையில் முக்கியத்துவத்தைப் பெற்று விடுகின்றன. மறக்க முடியாத நாட்களில் எனக்கு இந்த மார்கழி, 13 முக்கியமானநாள். அன்று எனக்கு பெரிதாக வேலை ஒன்றும் இருக்கவில்லை மாலை முடிந்து இரவின் ஆரம்பம். இருட்டுப்படர ஆரம்பித்துவிட்டது. எமது நண்பரை சந்திப்பதற்காக நானும் பாலாவும் எம்மிடம் இருந்த அந்த பழைய மோட்டார் சைக்கிளில் புறப்பட்டோம். மோட்டார் சைக்கிளில் லைட் இல்லை. எனவே ஒரு "டார்லைட்" டை எடுத்துக் கொண்டோம். டார்லைட்டுக்குள் பற்றரி இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"கடையில் பற்ரறியை வாங்கிக் கொண்டு அப்படியே போவோம்" பாலா கூறினுர்.
"கடையில் வாங்க காசு இல்லேயே?" என நான் கூறிய போது அந்த நிலேமையிலும் எமக்கு சிரிப்புத்தான் வந்தது.
"கடனுக்கு வாங்கலாம்" என பாலா கூறிய போது நம்பிக்கையுடன் நானும் புறப்பட்டு சென்றேன். இருட்டு வழி வெளிச்சம் இல்லே. மெதுவாக ஊர்ந்து சென்றது எமது மோட்டார் சைக்கிள். கண்ணுக்குள் விளக்கெண்ணே போட்டுக் கொண்டன போல் மிக அவதானமாக கூர்ந்து பாதையை பார்த்துக் கொண்டே சென்ருேம். அந்த பலசரக்கு கடையில் டார்ச்லேட் பற்ரறிகளே கடனுக பெற்றுக் கொண்டோம். நாளே பணம் தருவதாக கூறினேம். ஆனுல் அந்தப் பணத்தை நாம் கொடுக்கப் போவதில்லே என்று எமக்கும் தெரியாது. அவர்களுக்கும் எம்மிடம் இருந்து அந்த பணத்தை கேட்க முடியாத நிலமை ஏற்படும் எனத் தெரியாது. எமது நண்பர் வீட்டுக்கு நாம் சென்றபோது உற்சாகமாக வரவேற்ருர்." நல்ல கவிதை ஒன்று அறிவீரேன்" என்ருர். படித்தார். கேட்டோம். நண்பரின் மனேவி பக்கத்து கடையில் சீனி வாங்கி தேனீர் தயாரித்துத் தந்தார். தேனீரையும் சுவைத்தோம். ஒரு மணி நேரத்தின் பின் விடைபெற்று நானும் பாலாவும் புறப்பட்டோம்.
"வழி யெங்கும் ஒரே குழியும் குன்றும். லேட்வேறு இல்லே பார்த்து போங்கள்" என நண்பர் கூறினுர். "வரும் போதும் இந்த டார்ச்லேட் வெளிச்சத்தில் வந்தோம். போகும் போதும் சமாளித்துப் போய்விடுவோம்" எனக்கூறிவிட்டு புறப்பட்டோம்.
ஊர்ந்து சென்றது எமது வாகனம்.

"அதிகாலேயில்
யாழ்நகர் மீது பனி படர்கிறது.
பனே மர உயரம்
பண்ணே வெளியும்
கண் தொடும்
இடமெல்லாம் மறைகிறது...."

இரவு நேரத்து பயணங்களின் போது பாடல்களும் எமக்குத் துணேயாக வருகின்றன. சேரனின் பாடலே பாடிய படி சென்று கொண்டிருந்தோம். இன்னமும் சில நிமிடங்களில் பெரிய தோர் அிசியான தகவல் வரப்போகிறது என 'யார் அறிந்தார்கள்? இதனே முன் கூட்டியே அறியும் சக்திதான் மனிதனுக்கு இல்லேயே.

❈ ❈ ❈ ❈ தொடரும்

www.tamilarangam.net

# உலகம் பொதுவுங்க

சகாப்தன்

நாம் வாழுற உலகம்
நல்லது தானுங்க ஆனுல்
நாறிப் போன ஆசையினுலே
நாறுது உலகம் கேளுங்க!

உருண்ட உலகம் ஒழுங்காக சுத்துது
அதிலே உடமை இருக்கிறவனுக்கும்
இல்லாதவனுக்கும்
நடக்குதுங்க இழுபறி.

கணக்கை மீறித் தின்னுறன் ஒருவன்
காலி வயித்தை காயப்போடுகிறன் இன்னெருவன்
இது எதுக்குங்க
கொஞ்சம் யோசிச்சுப் பாருங்க!

மாடி வீடு கட்டி ஒரு கூட்டம்
கோடிசுகம் அனுபவிக்க
குடிசை வீடும் இல்லாம
வீதியிலே கிடந்து வாழுற கூட்டம் பலதுங்க!

சுரண்டல் கூட்டம் தொடருகிற செயலாலே
சுமைகள் உலகத்தில் தொடருது
நாம சும்மா பார்த்துக்கிட்டு நின்றுல்
சுத்திப் போட்டு போக நினைக்குது

www.tamilarangam.net

ஏய்க்கிறவனுக்கு உலகத்திலே
எவருக்கும் இடமில்லே இனி
குறுக்கு வழியிலே வாழ்பவருக்கு
குழி தோண்டும் காலமுங்க

உலகம் எல்லோருக்கும்
பொதுவுங்க
உண்மை இதுதானுங்க
இதை உணர்ந்து நாம
உருவாக்கிற வரைக்கும்
இந்த நிலேமை தானுங்க!

# வாசகரிடமிருந்து...............

அன்பு நண்பருக்கு தோழமையுள்ள வணக்கங்கள் .
தங்களுடைய "தேடல்" கண்டு திகைத்து மகிழ்ந்து போன பல தமிழர்களில் நானும் ஒருவன். இறந்து கொண்டிருக்கும் எமது இலக்கியத்துறைக்கு உயிர் கொடுக்க ஒரு உண்மை இதழை தேடியலேந்த தேடலுக்கு பதிலாக உங்கள் "தேடல்" ......! அப்பப்பா அசந்துவிட்டேன் ஒருகணம். மைபூசிய நடிகைகளின், பொய் உடலேக் காட்டிப் பொருள் சேர்க்கும் பத்திரிகையுலகில், மெய்யான மனிதர்களே உருவாக்கவெனக் கைகோர்த்து நிற்கும் காரிய வீரர்களே உங்களுக்கு என் கோடி வணக்கங்கள்!
எப்போதும் ஒரு கோஸ்டி சார்ந்தே கோஷமிட்டுப் பழகிய எம்மவர் மத்தியில், நடுநிலேயாக ஒரு இதழ் நடாத்துவது கடினமே. இந்த வகையில் உங்கள் முயற்சி ஒரு தீக்குளிப்பே! இதைஅறிந்தும் இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கும் உங்கள் உறுதிக்கும் தன்னம்பிக்கைக்கும் நான் தலேவணங்குகிறேன். என்றாலும் நாளடைவில் நீங்களும் நடைமுறைச்சிக்கல், அது, இது என்று சொல்லி அசிங்கங்களால் உங்கள் இதழை அலங்கரித்து விடுவீர்களோ என்ற அச்சம் எனக்கு உண்டு.
மேலும் நைஜீரிய மூளேசாலியுடன் உங்கள் சந்திப்பு நன்றாகயிருந்தது. "இந்தப் பொடியளுக்கு, தங்களுக்குத்தான் கனக்கத் தெரியும் என்ற தலேக்கனம் ஒரு மூளேசாலியின் முணுமுணுப்பு என் காதுகளிலும் விழுந்தது.
துயர்வேண்டாம் தொடருங்கள்! தோழர்கள் பலவுண்டு தோழமையுடன் ....!

சபா வசந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்புள்ள தோழருக்கு
"தேடல்"

தொடர்ந்து வெளிவருவதற்கு எம்மால் இயன்ற சகல உதவிகளையும் செய்வோம், செய்து தருவோம், தேடலுக்குத் தேவையான ஆக்கங்களையும் முடியும் வரையில் உரிய நேரத்தில் தேடித் தருவேன்.

தேடலின் நோக்கம் வாசிப்பது மட்டுமல்ல. யோசிப்பதற்காகவே முக்கியமாக இருக்க வேண்டும். தேடலை எல்லோரும் ஆவலோடு தேடவேண்டும். இத்தேடல் பொதுவாக வெளிநாடுகளில் வாழுகின்ற எல்லாத் தமிழர்களுக்கும் வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

இப்பத்திரிகையை வெளியிடுவதால் பொதுவாக நண்பர்களையும் தோழர்களையும் சேர்த்துக் கொள்வதிலும் பார்க்க எதிரிகளையும் விரோதிகளையும் தான் சேர்த்துக் கொள்வது மிகவும் அதிகமாக இருக்கும். பொதுவாக பல பத்திரிகை வெளியீடுகள் ஐரோப்பாவில் மட்டுமல்ல இலங்கையிலும் கூட பல தாக்கங்களை, விளைவுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆகவே நீங்கள் நிதானமாகவும் கவனமாகவும் தேடலை வழி நடத்திச் செல்லவும். (இது என் சொந்தக்கருத்துக்கள்)

எக் காரணங்ள் கொண்டும் தேடல் இடையில் தடைப்படக் கூடாது. தரமான பத்திரிகையாக தேடல் வெளிவர வேண்டும் என்று நான் ஆசீர்வதிக்கின்றேன். மனமார வாழ்த்துகின்றேன்.

தாங்கள் ஏதாவது விடயங்கள் தேவைப்படுமிடத்து தொலைபேசி மூலமோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளவும்.

பத்திரிகை வெளியானதும் எமக்கும் கொஞ்சப் பத்திரிகை அனுப்பி வைக்கவும். பத்திரிகையைப் பார்த்தவுடன் எழுத்தாளர்கள், கவிஞர்கள் பலர் முன்வரலாம்.

**முரளி (நெதர்லாந்து)**

---

இதுவல்ல தேடல்

**அன்புள்ள ஆசிரியருக்கு**

இரண்டாவது தேடல் பார்க்க கிடைத்தது. சங்கரி என்பவர் எழுதிய "அடிமை வாழ்வும் அதன் இன்பமும் என்ற கட்டுரை" பிற்போக்கு தன்மையை கொண்டிருக்கின்றது.

ஒரு கத்தோலிக்க மத குருவின் முடிவினால் ஒரு மாகாணத்தில் மொழியை மாற்ற முடிந்தது என்று கூறுவது ஆதாரமற்றதும் சிரிப்புக்குரியதும் ஆகும். கிறிஸ்தவமும், கத்தோலிக்கமும் தமிழுக்கும், தமிழருக்கும் செய்த நன்மைகளையும் இவர் குறிப்பிட்டு இருந்தால் இதை ஒரு விவாதத்திற்குரிய கட்டுரையாக எடுத்துக்கொண்டிருக்கலாம். "ஆங்கிலம் படித்த கனவான்கள்" எத்தனையோ பிழைகளை விட்டிருந்தாலும் அவர்களின் தலைமை தமிழ் தேசியத்தை காப்பாற்ற உதவியது என்பதை இவர் மறுக்க முடியுமா? அவர்கள் செய்தது பிழை, இவர்கள் செய்தது பிழை என்று பழங்கதைகள் பேசுவதினால் இன்றைக்கும் பிழைகளை விட்டுக் கொண்டிருக்கின்றோம். இதுவல்ல தேடல். "இனி எங்கிருந்து தொடங்குவோம்" என்ற வகையில் செயல் படுவதில்தான் வெற்றி இருக்கின்றது.

www.tamilarangam.net

தேடல் தொடர்ந்து இப்படிக் கட்டுரைகளை வெளியிட்டால் "இனி இருப்புக்காய் கலந்திடல், எழுந்திடல், பேசுதல் என்ற ஐயகரன் கவிதை வரிகளுடன் " மழுப்புதல் என்ற வரிகளையும் சேர்க்க வேண்டி வரும்.

நாடோடி

தேடல் ஆசிரியர்ட்கு

உங்கள் ஐப்பசி 89 இதழ் படித்தேன். வாசகன் என்ற முறையில் சில கருத்துக்களைக் கூறவேண்டி உள்ளது.

முன் அட்டைப்படம் மனத்தைத் தொடத்தான் செய்கிறது. அந்த மக்களின் விடிவுக்காக யார்தான் போராடப் போகிறார்களோ? அந்த மக்களின் அவல நிலைகள் தான் மற்றவர்களை வாழ வைக்குமே? பின் அட்டைப்படம் உங்களின் தேடலை நியாயப்படுத்திகிறதா அல்லது ஒருதலைப்பட்சமான பிரச்சாரம் செய்யத்தான் உதவுகிறதா தெரியவில்லை. ஒரு கோஷ்டியின் படம் உங்களால் பெற முடிந்தால் மற்றக் கோஷ்டியின் படங்களையும் பிரசுரிப்பீர்கள் என்றே எதிர்பார்க்கிறோம்.

இந்தப்படங்களுக்கு விளக்கம் கொடுக்க உங்களுக்கு பாரதியார் தானு அகப்பட்டார்? பாரதியாரை இழிவு படுத்துவதாகவே உணர்கிறேன்.இப் போதுதான் இந்தச் சம்பவங்ள் நடைபெறுகின்றன என்ற போலித் தோற்றத்தை உண்டு பண்ணுவதாகவே படுகிறது.. எம்மவர்கள் எம்மவர்களையே சுட்டு மின்கம்பத்தில் கட்டிய படங்கள் எதுவும் இல்லையா? இந்தக் கொலைகளை அரசியல் காரணம் கூறி விளக்கிவைக்க முடியுமா?

ஏதோ இந்தியா ஒன்றுதான் ஆக்கிரமிப்பு ராணுவம் என்ற கருத்துப்பட எழுதும் எழுத்துக்கள் மிகவும் வேடிக்கையாக உள்ளது. அமெரிக்கா, ஜப்பான் என்பன இலங்கையில் ஆக்கிரமித்துள்ள இடங்களைக் கண்டு விளக்கமாக எழுதுவீர்களா? சிங்களவன் உதைத்தபோது இந்தியாவிற்கு போகாமல் இருந்திருந்தால் சிலவற்றை நியாயப்படுத்தலாம். சிங்களவனுடன் ஐக்கியமாகிப் போய்விட்ட தமிழர்கள் இந்தியா பற்றி விமர்சனம் செய்ய ஏதாவது யோக்கியதை உண்டா? UNP உடன் சமரசம் செய்வதும் பேச்சு வார்த்தை நடாத்துவதும் தமிழரின் பாரம்பரிய வியாதி. வடக்கு கிழக்கில் நடந்த எம்மவர்களின் ஈழப் போராட்டம் UNP ஐ இலங்கையில் நிரந்தரமாக்கியது என்பதை உணர்ந்தால் நல்லது. இன்று UNP உடன் உறவு வைத்துள்ளவர்கள் தமிழ் ஈழம் பெறுவதற்கு பேச்சு வார்த்தை நடத்துகிறார்களா?

மேற்கு நாடுகளும் அமெரிக்காவும் இந்தியாவை சந்தையாக்க முனைகின்றன. அதற்கு ஒரு கருவியாக இலங்கையும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது .ஈழப் போராட்டக்காரர்களுக்கு தலைமைப்பீடம் லண்டனில் தானே உள்ளது. இலங்கையை விட்டு வெளியேறிப் போனவர்கள்தான் ஈழம் கேட்டார்கள் என்ற உண்மை எங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? இந்தியாவின் ஆக்கிரமிப்புப் பற்றி தடல் புடலான எழுத்துக்கள் எழுத முன்னர் எமது மக்களுக்காகப் போராடுகின்றோம் என்று புறப்பட்டு இருந்த சுதந்திரத்தையும் பறிகொடுத்து விட்டு நிற்க காரணமான இயக்கங்கள், லண்டன் தமிழர்கள் பற்றியும் எழுதுங்கள்.

எம்.சிவானந்தன்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத்திலிருந்து....

அன்பின் நண்பன் தேவனுக்கு, நலம். நாடுவதும் அஃதே.

நீ அனுப்பிய" தாயகம்", "தேடல்" முதலியவற்றைப் பார்த்தேன். சந்தோசப்பட்டேன். ஏனெனில் நாங்கள் நினைத்த மாதிரி விழலுக்கு இறைத்த நீராக எமது மரித்த நன்பர்களின் வாழ்க்கை போகவில்லை என்று. இப்பவும் ஏதோஒரு மூலையில் எம்மைப்போல் சிந்திப்பவர்கள் இருப்பது ஒருவித தெம்பைத் தருகிறது. மென்மேலும் வளருவதறகான எனது பிரார்த்தனைகள் இருக்கும். நிற்க! எங்களது வாழ்கையோ எதிர்காலம், தலைமை, நிலம் எல்லாவற்றையும் இழந்த நிலையில்!! இவ்வேளையில் எது உண்மை என்று தேடுவதே நியதி. என்னைப் பொறுத்தவரை எல்லாமே பொய்த்த நிலையில் சிநேகிதம், உறவுகள் கூட. எம்நாடோ எதிர் காலத்தையே தொலைத்த நிலையில். இன்றும் போராடவென்று இளைஞர்களும், பெண்களும் இயக்கத்திற்கு போய்க் கொண்டே இருக்கின்றுர்கள். ஒரு பகுதி தன்னைத் "தேசிய இராணுவம்" என்றும் மற்றபகுதி "இன்னென்று" என்றும் தங்களை வளர்த்துக கொண்டிருக்கின்றன.

தாம் என்ன செய்வது என்று முடிவு எடுக்க முடியாத சூழ்நிலையில் அவர்கள் இயக்கங்களுக்குப் புறப்பட்டு, மக்களுக்கு தலைமை தாங குவதாக முன் வருகிறுர்களாம். சோ கேட்டது தான் ஞாபகத்துக்கு வருகிறது. இந்தப் பதினுறு, பதினேழு வயது இளைஞர் களுக்கு எல்லாம் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தி இருக்கிறதா? நானும் "இப்படி" யொன்றுக்குள் போகும் பொழுது பெரிய அறிவில்லை என்பது உண்மைதான்.ஆனுல் இருந்து சிந்தித்து,கிரகித்து வெளியேறி விட்டோம்.ஆனுல் இன்றைய நிலைமையோ ஏதாவது ஒரு கட்சியில் இருந்தால்தான் வாழ்வு என்று ஒவ்வொரு சாராரும் மக்களை வெருட்டுவது வழமையான தொன்றுய் ஆகி விட்டது.

இது இப்படியிருக்க, 12, 13 வயதுகளில் ஆயுதத்தை பழகிவிட்டு எப்படி பிரச்சனைகளை இவர்கள் பேசித்தீர்க்கப் போகிறுர்கள்.அது நடவாத காரியம் முந்தியொரு"ஈழநாடு" பத்திரிகையில் ஒரு வேலிச்சண்டைப் பிரச்சனைக்கு கைக்குண்டு (GRENADE) ஒன்று எறிந்ததாக வாசித்த ஞாபகம். அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்சில் நடைபெற்ற குழுச் சண்டைகளிலும் கேவலமாக இங்கு நடக்கும். ..உனது பிள்ளையை இங்கு கொண்டு வந்து வளர்ப்பதிலும் நீ இருக்கும் நாட்டில் வளர்ப்பது சாலச் சிறந்தது.யார் யாரைக் கொல்வதென்பது இங்கு இல்லை. இனி முடிந்தவரை கொல்வதே இவர்கள் பேசும். "மொழியானது". இதில் ஐந்து பிழை செய்தவனை "நல்லவன" என்று சொல்லுவதா? அல்லது ஏழு பிழை செய்தவனை "கூடாதவன" என்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லுவதா? எனக்குத் தெரிந்தவரை இங்கு தகுதிக்கேற்ப செயற படுத்தப்படுகின்றன.

ஒரு போர்கால சமுதாயத்தில் என்னென்ன கேவலங்கள் நடைபெறுமோ அது எல்லாம் இங்கு மலிந்து காட்சிதருகின்றன. எந்தக் கலாச்சாரத்தையும், மொழியையும் நேசித்தமோ அது இன்றோ அதன் ஆகக்கூடிய இழி நிலையில். இதில் எதைச் சொல்வது எதை விடுவது. எல்லாமோ வெட்கக் கேடாயின.

ஒருத்தனைக் கொல்வதென்று முடிவெடுத்த பின் கிட்லர் கூட அவனை ஒழுங்காகக் கொன்றி ருப்பான்.ஒரு றவுன்சில் கொல்வதைவிட்டு அவனை அடித்து, பிய்த்து இறைவா!.... அனுதையாக அவனை றேட்டில் விட்டுச் சென்று அதை நாய் கடித்திழுக்கும் நிலையை இங்குதான் அதுவும் நமது மண்ணில்தான் பார்க்கமுடியும். பாரதி எதனை நினைத்து

"ஒருத்தனுக்கு உணவு இல்லையேனில் ஜகத்தினை அழித்திடுவோம்" - என்று சொன்னுனே தெரியாது. நான் ஏன் மேற் சொன்ன கவிதை வரி சொன்னேன் என்றல் ஒருவனின் பசியைக் கூட சகிக்க முடியாது, என்று அதற்காக உலகத்தையே அழிக்க வேண்டும் என்று பாரதி சொன்னுன். ஆனுல் இன்றோ ஒருவன் கேள்வியின்றி அனுதையாக கொல்லப்பட்டு பிணமாக கிடப்பது கூட இங்கு வழமையாகி விட்டது.

மரணங்கள் இங்கு புதினமில்லை. நாளை நான் கூட இல்லாமல் போய்விடக் கூடிய சூழ்நிலையே. இங்கு மக்கள் சுதந்திரமும் வேண்டாம், போராட்டமும் வேண்டாம் என்ற சூழ்நிலையில். வசதியுள்ளவர்கள் வெளிநாடுகளுக்கு வெளியேறிய வண்ணம். அன்றுடம் காய்ச்சி உழைப்பவன் மட்டுமே இங்கு எப்போ விடியும் என்று. நானும் கூட அந்த நிலையில் தான். இன்னும் இயக்கங்களில் இருக்கும் நண்பர்கள் கூட அதே நிலை. விட்டு விட்டு வந்து எங்கு போவது? எதைச் செய்வது? ஒரு பிழை செய்து அதை மறைக்க இன்னெரு பிழை செய்து அது இப்போ முடிவிலியாக மாறப்போகுது. இங்கு எரிமலைகள் உள்ளுக்குள் தகித்துக் கொண்டிருக்கின்றன. வெடிக்குமா? அல்லது அமுங்கிப் போகுமா? யானறியேன்!

இதற்கு வெளிநாடு களில் இருக்கும் அரசியல் தலைவர்களின் அரசியலால் வந்த விணை. நாட்டில் இருந்து போராடியவனுக்கு தெளிவும் இல்லை. அதே நேரம் அவன் தலைவிதியை அவனே நிர்ணயிக்க முடியாதசூழ்நிலை. எங்கிருந்தோ கட்டளைகள். என்ன செய்ய வேண்டும் என்று. எப்படி என்பது இங்கிருப்பவர்களின் பிரச்சனையானது. தேவை யில்லாமல் "இமேஜ்கள்" வளர்க்கப்பட்டு அதுவே பிரச்சனையாகி. ..! மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் போனது.

இங்கு நடந்தவை, நடப்ப வை எல்லாம் பிரச்சனைக்கான உடனடித் தீர்வே. தூரநோக்கில் யாரும் சிந்தித்ததில்லை. அதற்கு நானும், ஏன் நீயும் கூடத்தான் பொறுப்பாளிகள். முதற்பிழை செய்தபோது எதிர்த்து நின்று மோதியிருந்தால் கொஞ்சமாவது இழப்புகளைக் குறைத்திருக்கலாம். இது நியாயம் தேடிப்போய் ஒரு இடத்தில் கனபேர் வந்து சேர, அங்கேயே நியாயம் தொலைந்திருந்தது. அநியாயம் வியாபிக்கத் தொடங்கியிருந்தது. நானும் அதனைப் பார்க்க மறுத்திருந்தேன். அந்தளவுக்கு நம்பிக்கையயும், விசுவாசமும் ஊட்டப்பட்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரிந்து வெளியில் வந்த போது"துரோகி"யானேன். என்னைத் துரோகி என்று அழைத்தவர்களும் இப்போது கனடா, பிரான்ஸ் போன்ற நாடுகளில் இருக்கிறார்கள். அவர்களுடைய அப்பா, அம்மா பணக்காரர்கள் அல்லது மத்திய தர வர்க்கத்தினர். அவர்களால் பணம் புரட்ட முடிந்தது..உனக்குத் தெரியும் என் குடும்ப நிலை. என்னை ஒளித்து வைத்திருப்பதற்கு அவர்கள்படும்பாடு.

. அவர்க ளிடம் பணம் இல்லை. அன்பு இருக்கிறது.இன்னும் என்னை நேசிக்கிறார்கள். அந்த அளவில் நான் நிம்மதியாக இருக்கலாம். படித்ததையும் ஒழுங்காக முடிக்கவில்லை. அதை விட மனம் ஒன்றிலும் நிலையாக இருக்க முடியாதபடி பிரச்சனைகள்.. பசி ஒருபக்கம், கொலை வெறி பிடித்த மிருகங்கள் ஒருபக்கம். "அவல்" தின்ன இருக்கும் மக்கள் ஒரு பக்கம், கனவுகளில் ஓநாய்கள் துரத்துவது மாதிரிக் கனவு கண்டேன். எப்ப எதைத் தின்னுமோ?

இப்படி எனது நிலையும், நாட்டு நிலைமையும். நீ கேட்ட கேள்விகளுக்கு எனது கடிதம் பதில் அளித்திருக்கும் என நம்புகிறேன்.

வேறு என்ன சந்திப்போம்!.

பி.கு: இநத பத்திரிகை மாதஇதழ் அடுத்த சந்ததியி னருக்கு சிந்தனையை தூண்டு மாயிருந்தால் அதுவே போதும்.

என்றென்றும்,

நண்பன் சுகுணன்.

---

# ஓவியர் மாற்கு

## பற்றிய சில குறிப்புகள்

1933 இல் குருநகரில் பிறந்த மாற்கு சிற்பங்கள் செய்வதிலும், படங்கீறுவதிலும் அங்கு ஈடுபட்டுக்கொண்டிருந்த இராசேந்திரம் என்பவரின் வேலைகளைச், சிறுவயதில் அடிக்கடி பார்க்க நேர்ந்ததில், அவற்றால் ஈர்க்கப்பட்டார். சம்பத்திரிசியார் கல்லூரியில் எட்டாம் வகுப்பிற் படிக்கையில், வகுப்பாசிரியரான குருவானவர் 'மார்சலின் ஜெயக்கொடி'யின் (பின்னர் புகழ்பெற்ற கவிஞர்) உருவத்தை வரைந்தபோது, அவரால் பாராட்டப்பட்டதில் உற்சாகம் பெற்றார். ஓவியர் எஸ். பெனடிக்ற் சென். சார்ள்ஸ் பாடசாலையில் மாலை நேரங்களில் நடாத்திய இலவச ஓவிய வகுப்புகள், இவருக்கான அடிப்படையை அமைத்துக் கொடுத்தன.

1953 இல் கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் சேர்ந்து ஐந்து வருடங்கள் பயின்று பட்டம் பெற்றார். புகழ்பெற்ற ஓவியரும், விரிவுரையாளருமான டேவிட் பெயின்ரரின் அபிமானத்தைப் பெற்றவராக அங்கு விளங்கினார். 1955 இல் நுண்கலைக் கல்லூரியில் நடந்த கலைக் கண்காட்சிக்கு இவரது இருபத்தொரு ஓவியங்கள் தெரியப்பட்டன. வேறு எந்த மாணவனிடமிருந்தும் இரண்டு மூன்றுக்குமேல் தெரியப்படவில்லையாம். அக்காலத்திய இவரின் பெரும்பாலான ஓவியங்கள் சமய சம்பந்தமானவையாக—கிறீஸ்துவின் உருவங்களைச் சித்திரிப்பவையாய் அமைந்தன. 1957 இல் 'கலாபவனத்'தின் வருடாந்த ஓவியக் கண்காட்சியில் இரண்டாவது பரிசினையும் பெற்றுள்ளார்.

''கோடுகளால், வடிவத்தால், வர்ணத்தால் செய்வதுதான் ஓவியம்'' என்று எளிமையாக விளக்கும் மாற்கு, ''சர்வதேசிய மொழியாக இருத்தலும், காலத்தைப் பிரதிபலித்தலும்தான் ஓவியத்தின் சமூகப் பயன்பாடு'' என்றும், சொல்கிறார். தான், எந்த ஓவியர்களினாலும் கலைப் பாதிப்புக்குள்ளாகவில்லை என்கிறார். எனினும், எல் கிறேக்கோ (El Greco) என்ற ஸ்பானிய ஓவியரை மிகவும் விரும்புகிறார்.

நன்றி: அலை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீட்சிக்கு வழி

ஈழத்தின் சகோதர சகோதரிகளே,
நான் என் நாட்டை விட்டு வெளியேறியவன்
ஆயினும்
நான் சொல்பவை ஈழத்தில் விழுதூன்றிய
என் நெஞ்சிலிருந்து வருபவை.

நீங்கள் ஒவ்வொருவரும் சுமந்தவை
அனேகம்.
உங்கள் அரிய மனித வாழ்கை, இப்பூமியில்
தேவையை நோக்கியே அமைந்தது

கோடானு கோடி வருடங்கலாய்
நிலைத்த இப் பிரபஞ்சத்தில்
கடந்த சில பத்தாண்டுகள் என்பவை,
ஓர் கணப்புள்ளியே!
அதனால் நீண்ட காலக்களத்திலே
நம் பிரச்சனையை நோக்குவோம்.

எமக்குள் பெரும் பெரும் வேற்றுமை
இருப்பினும்
சொல்லும் செயலும் நிறைவுற்ற கணத்திலே
யாதும் ஓர் ஊரே, யாவரும் மக்களே!

மறக்கவும் மன்னிக்கவும் முடியாத தன்மைகள்,
காலங் காலமாய் தேங்கிய பகைமைகள்
எமக்குள் வழியும்,
மத்திய கிழக்கும் வட அயர்லாந்தும்
பழைய நினைவுப் படிவுச் சாபத்தால்
பலியிடும் கோடியாய் மக்களை இன்றும்!

ஈழத்தில் நம்மினத்தின் மீட்சி,
மன்னிப்பையும் மறுத்தலையும் கோருது..
அதனால் அண்மைக்காலக் கசப்புகளுக்கிடையிலும்
கதைக்கவும் சக தமிழனை சகோதரனாய்
தேசிக்கவும் தொடங்குவோம்!
மிகுதி தானாகவே உறுதிப்படுத்தப்படும்
நீங்கள் மீட்சிக்குரிய தூண்டிலில் இயங்கினால்
நாமும் உம்முடனே எல்லா நிலையிலும்!

என்
ஏ.
ரஞ்சிதன்
(எம்.டி. அமெரிக்கா)

நன்றி:திசை

www.tamilarangam.net

(ஒரு துரோகியின்.......தொடர்ச்சி)

உறைந்து போகிறேன். என் மூளை சிதறி பரவ... என் இரத்தம் நிலமெல்லாம் சிதற... என் கண்கள் இரண்டும் வெளியே தள்ள.... நான் இறந்து போகிறேன். லெப்டினன்ட் பெருமிதாக சுற்றிப் பார்த்து தன் வீரத்தை மெச்சும் போராளிகளைப் பார்க்கிறான். இதயம் உள்ள என் நண்பன் தன் முகத்தைக் குனிந்து.... அவன் கண்களில் இருந்து சில துளிகள் என் இரத்தத்துடன் சேர்ந்து நிலத்தை ஈரமாக்கின்றன. அவர்கள் வெற்றிப் பெருமிதத்துடன் முகாமுக்குத் திரும்புகிறார்கள். நான் தலை தொங்க. .. வைரவருக்கு பலியாகிக் கிடக்கிறேன். காகங்கள் கரைகின்றன. நான் அனாதையாக... துரோகியாக...

என்னை பார்வையிட மக்கள் கூட்டம் குழுமுகிறது. எவருக்கும் பேச திராணியில்லை. ஒவ்வொருவரும் தங்களுக்குள் நியாயத்தைப் பேசிக் கொள்கிறார்கள். யாருக்கும் உரத்துப் பேசத் துணிவில்லை. சில "பக்தர்கள்" அது சரிதானே என்று நியாயப்படுத்துகிறார்கள். என் நண்பர்கள் மெதுவாக வந்து கண்களைத் துடைத்துக் கொள்கிறார்கள். "இவன் பேசாமல் இருந்திருக்கலாம்" நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? இரவுகளில் எனக்கு வெறும் அஞ்சலிகள்.. சுவர்களிலே ஒட்டப்படப் போகின்றன. வெறும் மனிதர்களாக நாங்கள் வாழ்ந்து விடுவதில் அர்த்தமில்லை. உண்மைக்காக குரல் கொடாமல்... நாங்கள் இன்னுமே மௌனமாக.... ஏன்? மற்றவர்கள் பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளும் நாங்கள் மற்றவர்களுக்கு அநியாயம் நடக்கும் போது மட்டும் மறுபக்கம் தலையைத் திருப்பிக் கொள்கிறோம்.நண்பர்களே! என்னைப் போல முடிவுகளை எதிர்பார்த்து பயந்தால்... இன்று நான்.. நாளை? நீ? இந்த சமுகத்துக்கு ஏதாவது செய்ய வேண்டும். வெறும் சுவரொட்டிகள்.... விடுதலையைப் பெற்றுத் தருமா? எனது குரல் தனித்ததால் தான் நான் இறந்து போனேன். நான் பேசும்போதெல்லாம் நீங்கள் கருத்துச் சொல்ல வந்தீர்கள். நான் குரல் கொடுத்தபோது நீங்கள் மறைந்து போனீர்கள். நீங்களும் என்னோடு இருந்திருந்தால்... எங்கள் குரல் உயர்ந்திருக்கும். நானும் மரணித்துப் போயிருக்க மாட்டேன். உண்மை வெல்லும் என்பதெல்லாம் புத்தகங்களில் மட்டும் தான்.. உண்மை வெல்வதற்கு ஒரு வேள்வி வேண்டும். சில பலிகள்.. ஆனால் உண்மை தானே வெல்வதில்லை. நாங்கள் பலியாவோம். .. எங்கள் அடுத்த தலைமுறையாவது... சுதந்திரமாக....

நான் இறந்து போகிறேன். நான் ஒரு சாமான்யன்.. தியாகி அல்ல. .. மாவீரனும் அல்ல... வெறும் மனிதன்! அதனால் யாரும் மனிதம் இறந்ததாகவோ, மனித உரிமைகள் மீறப்பட்டதாகவோ குரல் கொடுக்கப் போவதில்லை. இன்னொரு உயிர் பலியாகி விட்டது. மக்கள் இன்னொரு நாளுக்கு தயாராகி விட்டார்கள்.

அரசியல்வாதிகள் குகைகளுக்குள் முடங்கினால்;
சந்தர்ப்பவாதிகளிடம் நாடு சிக்கிவிடும்.
- கார்ல் மார்க்ஸ் -

www.tamilarangam.net

தன்னுள் கிளர்ந்தெழும் உணர்வுகளை வெளிப்படுத்தவே,நவீன ஓவியன் வரைகிறான். நவீன ஓவியனின் அர்த்தங்களைப் பார்வையாளர்கள் எல்லா நேரங்களிலும் தெளிவாகப் புரிந்துகொள்ளவதில்லை.ஒரு சந்தர்ப்பத்தில் பிக்காஸோ கூறினார்: "எனக்கு ஆங்கிலம் தெரியாது. எனவே,ஆங்கில நூலும் எனக்கு வெறுமையாகவே இருக்கும்.அதனால்,ஆங்கில மொழியொன்றில்லை என அர்த்தமாகாது. மேலும்,எனக்கு என்ன தெரியாது என்பதனை நான் உணர்ந்து கொள்ள முடியாதாயின், அதற்காக என்னைத் தவிர வேறு எவரையும் குறை கூறுவானேன்?"

(தேடலும் படைப்புலகமும் எனும் ஓவிய நூலில் இருந்து)

நாம் இந்த தலைமுறையில் வருந்த வேண்டியிருக்கிறது, கொடியவர்களினது ஈனச் செயல்களுக்காக மட்டுமல்ல அதற்கும் மேலாக நல்லவர்களினது பயங்கர மௌனத்திற்காகவே!

மாட்டின் லூதர் கிங்
(Martin Luther KinG)

(மனித விரோதிகளால் படுகொலை செய்யப்பட்ட
திருமதி ராஜினி திரணகமவுக்காக யாழ்பல்கலைக்கழக
மாணவர்களால் வெளியிடப்பட்ட பிரசுரத்திலிருந்து)

www.tamilarangam.net

# ஒரு கணம்..................

உயர்ந்த கட்டிடம்.
அதிலும் மேலான
எண்ணங்கள்,சுமைகள்.
மனிதன் தங்குவதற்காய்
(வசிப்பதற்காய் அல்ல)
நான்கு சுவர்,
நாட்காட்டி,கடிகாரம்.
தொடரும் வாழ்வு.

ஓய்வு,
ஜீரணிக்க முடிவதில்லை.
நடந்தவை ,
மீட்க முடிவதில்லை.
நாளை,
என்ற நினைப்பு
தூக்கம் மறுக்கும்.
காலை,
கடிகாரம் துரத்தும்.

இயற்கையை எதிர்த்து
மனித வாழ்வு.
முடிகிறது,சிலவேளை
மரணங்கள்.
நாளாந்தம்,
ஆழிக்குள் மூழ்கி
சுழியில் இழுவுண்டு
மூச்சை தக்கவைக்க
வியர்வை.


www.tamilarangam.net

போதும்......!
மனிதன் தன்னை அழித்தும்
வாழலாம் என்பது
எவ்வாறு முடியும்?

ஆரம்பம்
ஆதரவு, ஆர்ப்பரிப்பு.
இவ்வேளை எமக்கில்லை.
யாரோ...? எவரோ...?
அங்கு ,இங்கு
எங்கோ சூழ்ச்சி.

ஒருகணம்,
உழைப்பின் உயர்வு ?
சுரண்டல் ?
மனிதனின் அடிப்படை ?
எதிர்பார்ப்பு ?

மற்றொருகணம்,
சமூகத்தின் வளர்ச்சி
நான்கு பட்டதாரிகள் ?
சமூகத்தின் மேன்மை
நான்கு வியாபாரிகள் ?
சமூகத்தின் ஏற்றம்
கோயில் கோபுரம் ?



இன்னொருகணம்,
நீ.........?
நான்.....?

நாட்காட்டி,
இன்னொரு நாளை
இழக்கும்.

பா.அ.ஜயகரன்

☆ ☆ ☆ ☆ ☆

www.tamilarangam.net

சிறுகதை

# ஒரு "துரோகியின்" இறுதிக் கணங்கள்

-ஜோர்ஜ் இ. குருஷேவ்-

இழுத்திப் போர்த்துக் கொண்டே உறங்க வைக்கும் மார்கழிப்பனி. அந்த அதிகாலை நித்திரையில் இருக்கும் இதம். "மாமா, கோப்பி குடியடா" ரொம்ப மரியாதையாய் வேண்டும் அக்காவின் வாண்டு. கையை மடக்கி கன்னத்தில் வைத்து குந்தியிருந்தபடியே என் முகத்தை பார்க்கும் அவனின் முகத்தில் தவழும் புன்னகை. நான் கூட அவனைப் போல குழந்தையாகவே இருந்திருக்க முடியாதா என்று ஏங்கும் என் மனம். என் போர்வையை இழுத்து என்னை சீண்டி வேடிக்கை பார்க்கும் அவனது குறும்பு. என் மேல் பாய்ந்து என் போர்வைக்குள் பாய்ந்து தந்த முத்தம். .. "டேய் மாமா எழும்படா" "அங்க பார் அவர் மாமனைக் கூப்பிடுற மாதிரி" வாசற்படியில் இருந்து மரங்களைப் பார்க்கும் ஆச்சி. இன்னும் தாமதித்தால் என் கோப்பியைக் கபளீகரம் பண்ணி விட்டு யுத்தப்பிரகடனம் செய்வான். போர்வையை இழுத்து ஆயுத ஒப்படைப்புச் செய்து விட்டு சரணடைகிறேன். தானே சுருண்டு தன்மேல் பாயைச் சுற்றிக் கொள்கிறன். வேலியிலே பாய்ந்து பாய்ந்து கொத்திக் கொத்தி சத்தம் போடும் மண்டைக்காகம், "இந்த சனியன் என் கத்துதோ தெரியேலை?" கிணற்றடியில் சட்டி பானை கழுவும் அம்மா. "சின்னவன்ரை கடிதம் வரப்போகுது போல" வெளியே மண்வெட்டியை நெளிவெடுக்கும் ஐயா. முற்றத்தைக் கூட்டும் அக்கா. படலையைத் திறந்து வெளியே வருகிறேன். இந்த குளிருக்குள்ளும் சேட்டில்லாமல் நிற்பதும் ஒரு சுகானுபவம் தான்.

முன்னால் உருளைக்கிழங்குத் தோட்டங்களை மூடியிருக்கும் பனி மூட்டம். தென்னோலையை நுழைத்து வந்து உடலை வருடி, மயிர்க் கணுக்களை சில்லிட வைக்கும் ஒளிக்கதிர்கள். கோரைப் புற்களிலே நியோன் விளக்குகளாய் பனித் துளிகள். தூரத்தில் வாட்டர் பம்களின் இரைச்சல். அந்த நீரில் எழுந்து வரும் நீராவி. முன்வீட்டு மாமியின் மதிலுக்கு மேலால் வளைந்து வரும் வேம்பு. தொங்கி ஒரு குச்சியை முறித்து பல்லை விளக்குகிறேன். குளிரைத் தாங்குவதற்காக ரோட்டிற்கு வந்த அனைவரும் அந்த வேம்புக்குள் கூடி "ஆறரைச் செய்தியின்" பின்னணியை அலசுகிறோம். இதோடு எங்கள் பலரின் அரசியல் கடமைகள் முடிந்து போய்விடுகின்றன. மெதுவாக

www.tamilarangam.net

வரம்புகளுக்கு ஊடாக கிணற்றடிக்கு செல்கிறேன். அந்த செம்பாட்டு மண்ணில் வெறுங்காலோடு திரிந்ததால் மரத்துப்போன அந்தப் பாதங்களில், புற்களின் மேலிருந்த பனி ஸ்பரிசிக்கும் போது உடல் சில்லிடுகிறது. ஊ... இந்த இயற்கை தரும் சுகத்திலேயே இறந்து போனால் என்ன? என்ன? மரணம்? மரணம் இப்போதெல்லாம் மனித மனங்களில் மாற்றத்தை ஏற்படுத்துவதில்லையே. நாளைய விடியல் எப்படி உறுதியோ அப்படியே மரணமும். ...

நான் நேசித்த மண். .. அதன் பசுமை.... எல்லாம் சில மூடர்களின் வெறியால் களங்கப்பட்டு. .. வைரவரின் வேள்வியின் பின்னேரத்தில் மட்டும் மணக்கும் இரத்தவாடை இப்போது தினசரி..... அந்த வேள்வி இரத்தம் கூட அன்றைய "ரத்தம் கழுவும் மழையில்" மறைந்து போகும். இன்று சிந்தும் இரத்தம் கூட எந்த மழையில் கழுவுண்டு போகும்? கண்ணீரில்? இந்த செம்பாட்டு மண்ணில் இரும்பு அதிகமாமே? சிந்திய இரத்தம் செறிந்ததாலோ?

கிணற்று வாளியைக் கழற்றி பைப்பில் பிடித்து நிறைத்து மேலில் ஊற்ற... மணித்துணிகளாக நீர் சிதறி.... இந்த சுகம்.. எப்போதும் கிடைக்குமா? இன்றைய பொழுது மட்டுமே உண்மை. நாளை வெறும் சூனியம்... பதவி வெறி கொண்ட தியாகிகள்... மக்களை நேசிக்காமல் மண்ணை மட்டும் நேசித்த மரத்த மனங்கள்.. கொள்கைகளுக்காக உயிர் துறக்க வந்து உயிரைக் குடிக்கும் இரத்தக் காட்டேரிகள்.. துரோகிகளைத் தண்டிக்க ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையாவது கிடைத்த வாக்குரிமையைக் கூட இழந்து மௌனித்திருக்கும் மக்கள்.... கத்தியால் குத்தியவனைக் கொலைகாரனாக்கி பசித்துத் திருடியவனைக் கள்வனாக்கி துப்பாக்கியால் சுட்டவனையும் கொள்ளையடித்தவனையும் தியாகிகளாக்கிய வழிபாட்டுக் கும்பல்... "எப்படி இறைத்தாலும் வத்தாத கிணறு" அடிக்கடி பெருமைப்படும் மாமா. மக்களின் கண்ணீர் போல... குளித்து முடிகிறது.

குசினிப் படிக்கட்டில் மண்சட்டிக்குள் பழஞ்சோற்றை மீன்கறியுடன் குழைக்கும் அக்கா... "இந்தாடா, பலாவிலை" மரியாதையுடன் நீட்டும் வாண்டு. உருளையாய் சோற்றை இலையில் அக்கா வைக்க... தன் கையில் உள்ளதை தொடாமல் என்கையில் உள்ளதை கடிக்கும் வாண்டு... வாடிப்போன அக்காவின் முகத்தைப் பார்த்து பெருமூச்சு விடும் ஐயா... கண்களைத் துடைக்கும் அம்மா... தந்தை இறந்ததே தெரியாமல் "அப்பா ஏன் நித்திரை கொண்டவர்?" என்று அடிக்கடி கேட்கும் வாண்டு...

நீ வளர்ந்த பின்பும் "அழிவில்லாமல் சுதந்திரம் இல்லை" என்பார்கள். நம்பி விடாதே! அழிவுகள் நிச்சயம் தவிர்க்கப்படலாம். பழஞ்சோற்றுத் தண்ணிக்குள் தேங்காய்ப்பால் விட்டு.. . "நல்ல குளிர்மை, மொத்தமாய் வருவாய்'' வாண்டுவை உற்சாகப்படுத்தும் ஆச்சி.. வீட்டிற்கே சுமை தாங்கியாய் உழைக்கும் அண்ணை சைக்கிளைத் துடைத்துக் கொண்டிருக்க. ... காகம் இன்னும் கத்துகிறது.. அம்மா எதையோ எறிந்து துரத்துகிறாள். மனம் மரணத்துள் தாவுகிறது. ஏன் நான் மரணம் பற்றி சிந்திக்கிறேன். நான் நேசித்த மண், இந்த குடும்பம், எதிர்த்த அநியாயங்கள்.. நான் இந்த மண்ணிலேயே மரணித்துப் போன இன்னொரு மனித ஜீவனாகி விடுவேன். நான் இறந்து போனால் உலகம்

www.tamilarangam.net

ஸ்தம்பித்து விடாது. பிணங்கள் எல்லாம் விளக்கில் பட்ட விட்டில்கள் போல் குவிந்து கிடக்க... மக்கள் பயப்பட மாட்டார்கள். அடிக்கடி எமனோடு பழக்கப்பட்டதாலோ என்னவோ நாய்களும் குரைக்க மறுக்கின்றன. தங்கள் தொழிலை மனிதப் பெயரில் உலவும் மிருகங்கள் செய்வதால் கோபமோ? மரணம்.... நெஞ்சமே வெறுமையாகி என் தொண்டைக்குள். ..நான் இறக்கத் தயாரா?

நாய் முனகுகிறது.. "ஆரோ படலைக்குள்ள" அம்மா ஐயாவைத் துரத்த... கையில் பைகளுடன் சைக்கிளில் நின்றபடி மூவர் "உன்ர மோன் நிக்கிறானே?" மீசையே அரும்பாத டீன்ஏஜ் போராளிகள்... மரியாதைகள் எல்லாம் என்றோ எங்கோ போய் விட்டன. ஐயா சிலையாக நிற்கிறார். ஐயாவை நெஞ்சில் பிடித்து தள்ளியபடி உள்ளே வருகிறார்கள். ஜன்னலுக்குள்ளால் பார்க்கிறேன்.. பாய்ந்து வந்து கதவை உதைந்து.... ஆங்கிலப்படங்கள் பயிற்சி கொடுத்திருக்கின்றன. வேகமாய்ப் பாய்ந்து சுவரோடு என்னைத் தள்ளி துப்பாக்கியால் என் வயிற்றில் குத்த. .. நான் புரிந்து கொள்கிறேன்.. மரணம் எந்நேரமும் வரலாம்...

"என்ன தம்பி அவனை அடிக்கிறீங்கள்" ஐயா ஓடி வருகிறார். "ஐயா மிருகங்களிடமா கருணையை எதிர்பார்க்கிறீர்கள்?" நான் சலனமில்லாமல் ஐயாவைப் பார்க்கிறேன்.. அம்மா குளறியபடி ஓடி வருகிறா "ஐயோ ராசா அவனை விடுங்கோ" துப்பாக்கி முனையால் அம்மாவை உறைய வைக்கிறார்கள் இந்த தமிழ்த் தாயின் மானம் காக்க புறப்பட்ட இந்த தனயர்கள்.. "ஏகே 47" விபரமறியாமல் தன் புலமையை வெளிக்காட்டும் வாண்டு. வரலாற்றை முன்னேற்றி விட்டார்கள். ஒரு காலத்தில் வில்லுக்கத்தியும் வாளும் தான் எமது ஆயுதங்கள். இன்று வளர்ந்து விட்டோம். எங்கள் சிறுர்கள் எல்லாம் இராணுவ நிபுணர்கள் ஆக்கப்பட்டு விட்டார்கள். ஒருவன் மேசையைக் கிளறுகிறான். சில நோட்டீஸ்கள். "ஆதாரங்கள்" கண்டெடுக்கப்பட்டு விட்டன. இனியென்ன நான் துரோகிதான். யாரோ ஒருவன் என் முகத்தில் ஏகேயின் பின்புறத்தால் இடிக்கிறான். என் வாயில் உப்புக் கரிக்கிறது. என் முகத்தில் சலனம் இல்லை. மரணத்தை நான் இனி வெற்றி கொள்ள முடியாது. நான் தோற்று விட்டேன். குளற வாயைத் திறந்த அக்காவின் வாய்க்குள் ஒரு ஏகே.

"விடடா அம்மாவை" வாண்டுவை காலால் உதைகிறான். தமிழ் காப்பவர்களிடம் உன் தாயைக் காக்கப் போகிறாயா? சுவரில் மோதிய வாண்டு அலறுகிறான். "வாண்டு கோழையாகாதே. நீ இந்தச் சமுகத்தின் பிரதிநிதி அல்ல, அதன் அங்கம். மௌனமாகாதே. அடுத்தவன் வீட்டிற்கு தீ என்று மௌனமானால் உன் வீடு தான் அடுத்தது... உன் வயதில் இந்த ஆயுதங்களும் கொள்கைகளும் உன்னைக் கவர்ந்திழுக்கும். வெறும் உணர்வுகளுக்கு அடிமையாகாதே" ஐயா பேச முடியாமல் விக்கித்துப் போகிறார். "ஐயா, அமைதியாய் அன்றாடம் கஞ்சியைக் குடித்துக் கொண்டிருந்த உங்களுக்கு இந்தப்போர் அர்த்தம் இல்லாதது. ஆனால் மனிதன் சுதந்திரம் அடைய வேண்டும். சுதந்திரம்.... இவர்கள் வரையறுத்த சுதந்திரம் அல்ல. . சுதந்திரம் வெறும் பூகோள எல்லைகளுக்குள் வகுக்கப்பட்ட சுதந்திரம் அல்ல... உக்கிப் போன இந்த மனங்களுக்கு, சிந்தனைக்குள் சிறைப்பட்டுப் போயிருக்கும் இந்த

www.tamilarangam.net

உயிர்களுக்கு கிடைக்க வேண்டிய சுதந்திரம்..."

"அவனை விடுங்கோ..ராசா" அம்மா கெஞ்சுகிறாள். "அம்மா எனக்காக அழாதே.. இந்த சீரழிந்து போன சமூகத்துக்காக அழு. . நான் வெறும் சாமான்யன்.. அநீதியைக் கண்டு மௌனமாக இருக்கத் தெரியாத ஒரு மூடன்.. உன் மகன் ஒரு கருத்துக்காக உயிர் துறந்தான் என்று பெருமைப்படு. . அவன் இறக்கும் போதும் அவன் கரங்களில் இரத்தக்கறை இல்லை என்று நினைத்துப் பெருமைப்படு. . உன்னால் ஒரு புறநானூற்றுத் தாய் போல் இருக்க முடியவில்லை. ஏன்? நீ என்னை நேசித்திருக்கிறாய். வெறும் யுத்தம் முடிவுகளைத் தராது என்று உனக்குத் தெரியாமல் இருந்தாலும் நீ என் கையில் வேலைக் கொடுக்கவில்லை. நீ இவர்களைத் திட்டக் கூடும். வேண்டாம். இவர்களும் உன் பிள்ளைகள் போன்றவர்கள் தான்."

விறைத்துப் போயிருந்தான் அண்ணா. "நான் இவர்களுடன் முண்டிக் கொள்கிறபோது எல்லாம் என்னைத் திட்டுவாய். நீ பொறுப்பு நிறைந்தவன். நான் துடிப்பு நிறைந்தவன். நீ நானாகவும் நான் நீயாகவும் இருந்திருந்தால் இதையே செய்திருப்போம். கொள்கைகளுக்கு மயங்கி அநியாயங்களை நியாயப்படுத்துவதை விட மௌனமாய் இருப்பதும் ஒருவகையில் நல்லது தான். முடியாவிட்டால் மௌனமாயிரு. மயங்கி விடாதே."

அக்காவின் உறைந்து போன முகத்தில் எந்த உணர்வும் இல்லை. "உன் கணவனையும் காரணம் இல்லாமல் பழி கொண்ட இந்தப் போர்.. இன்று நான்.. நாளை உன் மகன்.. சிந்தி... அவன் வளரட்டும்... மண்ணை மட்டும் அல்ல, இந்த மக்களையும் நேசிக்க அவனுக்கு கற்றுக் கொடு.. நீ என்றோ இறந்து போனாய்.. உன் பிள்ளை தான் உன் உயிரை உன் உடலிலே ஒட்ட வைத்துக் கொண்டிருக்கிறான். எங்கள் போர் எல்லாம் உன் மகனுக்காகத் தான். எங்கள் தலைமுறை அழிக்கப்பட்டு விட்டது. அவனது தலைமுறை என்றாலும் இந்த மண்ணில் சுதந்திரத்தைச் சுவாசிக்கட்டும். எங்கள் சுவாசத்தில் கலந்த நஞ்சு அவனுக்கு வேண்டாம்"

"ஆளை விசாரிக்கப் போறம்" தங்களைத் தாங்களே நியமித்துக் கொண்ட நீதிபதிகள். வெளியே வருகிறோம். திரும்பி வீட்டைப் பார்க்கிறேன். இப்போதும் அந்த மண்டைக்காகம். எல்லோரும் அழுகிறார்கள். என் கண்களுக்குள் சலனம் இல்லை. மரணம் தான். வேலிகளுக்குள் பதுங்கி நின்று பார்க்கும் அயலவர்கள். இறுதியாக அந்த மண்ணைப் பார்க்கிறேன். மக்கள் இல்லாமல் மண்ணுக்கு ஏது பெருமை? ஒதுக்குப் புறமான வைரவர் கோவில். பழுத்திருக்கும் புளி. பள்ளிக் கூடம் முடிந்து கல்லெறிந்த புளி.. "கீழ நிண்டால் பேய் பிடிக்குமாம்" உண்மை. பேய்கள் பிடித்து கீழே கொண்டு வந்து விட்டிருக்கின்றன. மூலஸ்தானத்தில் இருந்து வந்த லெப்டினன்ட், ரத்தம் குடிக்க வந்த வைரவர் போல். "உனக்கென்னடா, பெரிய ஆளெண்டு நினைப்போ. கனக்க கதைக்கிறியாம்" சப்பாத்துக்கால் அடிவயிற்றில்.. நான் வயிற்றைப் பிடித்துக் கொண்டு சுருண்டு விழுகிறேன்.

என்னைத் தூக்கி தூணிலே கட்டுகிறார்கள். இதிலே தான் பசியில் அழுத பிள்ளைக்காக இராணுவத்திடம் உணவு வாங்கிய என் நண்பன் தலைகீழாகக் கட்டப்பட்டு "சமூகவிரோதி"யானான். வைரவரும் எத்தனை நாள் ரத்தம் இல்லாமல் இருப்பார்? மக்களிற்கு "அரசியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெளிவு" வேண்டும் என்பதற்காக கூட்டிய கூட்டத்தில் அந்த அநீதியைக் கேட்டதால், நாலு சுவர்களிலே உண்மையை எழுதியதால்.. நான் துரோகி. சுவரொட்டிகளிலே அரசியல் கற்றுக்கொண்ட இந்த மாவீரர்கள்... மக்களுக்கு அரசியல் போதிக்கிறார்கள். நான் என் தலையை நிமிர்த்த திராணியற்று தொங்க விட்டுக் கொள்கிறேன். யாரோ ஒரு கப்டன் பெரிய பலகையால் என் காலுக்குள் கீழ் அடிக்க.... எனக்கு நோகவே இல்லை. நான் சலனமே இல்லாமல் கண்களை மூடிக் கொள்கிறேன். லெப்டினன்ட் எதனுலோ என் முகத்திலே குத்த என் பற்கள் உடைந்து இரத்தம் வழிகிறது.. நான் முனகுகிறேன்.. என் முகத்திலும் அவர்கள் முகத்திலும்...ஒரே தாகம். நண்பனே! நீ பிழைக்கத் தெரிந்தவன். . ஊரிலே கோளாறுகள் புரிந்த நீ ... லெப்டினன்ட் ஆகி விட்டாய். நான் முட்டாள். வெறும் துரோகியாகி விட்டேன். நான் இருந்தாலும் இறந்தாலும் துரோகி. பயப்படாதே, நீ இறந்தால் அடுத்தது கேணல் பதவி தான். நண்பனே! நீ உன்னை எதற்காக சுதந்திரப் போராளி என்று அழைத்துக் கொள்கிறாய்? நீ வெறும் போராளி தான். இறைச்சியைச் சுவைத்துவிட்டு எலும்புத்துண்டுகளை மட்டும் உனக்கு வீசுகின்ற எஜமானர்களுக்காக, அவர்களின் மகிழ்ச்சிக்காக வேட்டையாடுகின்ற நீயா சுதந்திரப் போராளி? சிந்திக்க முடியாத நீ, சரியென நினைத்ததை செய்ய முடியாத நீ வெறும் ராணுவ வீரன். கட்டளைகளுக்கு நாய்களும் தான் பணிகின்றனவே. எது விடுதலை? விடுதலை பெற வேண்டியது நான் அல்ல. நீ தான். எனக்கு விடுதலையை நீ பெற்றுத் தரவேண்டாம். நீ சுதந்திரம் பெறவேண்டும்.. உன் எஜமானர்களிடம் இருந்து... உன்னைச் சிந்திக்க விடாமல் தங்கள் பதவிகளுக்காக உன்னை வேட்டைக்கு அனுப்பும் அந்த எஜமானர்களிடம் இருந்து... வேட்டையில் நீ உயிர் துறந்து போனுலும் உனக்கு வெறும் பட்டங்கள் தான். நீ அழிந்து போனுலும் உன் எஜமானர்களுக்கு உன்னைப் போல் ஆயிரம் பேருண்டு. நீ எப்போது சிந்திக்க தொடங்குகிறயோ அன்றே நீயும் உன் எஜமானனுக்கு என்னைப் போன்றவன் தான்... துரோகி. நண்பனே! உன் எஜமானர்களின் கட்டளைக்கு கீழ்ப்படியும் வரை தான் உனக்கு எலும்புத்துண்டுகள். இல்லாவிட்டால் உன் எலும்புத்துண்டுகளை நாங்கள் தோட்டங்களுக்குள் தேட வேண்டியிருக்கும்.

கப்டன் துப்பாக்கியை எடுக்கிறன்.. நேரே நீட்டி என் நெற்றியிலே அழுத்தி.. அவன் முகத்திலே தோன்றும் மகிழ்ச்சி.. துரத்திய முயலைப் பிடித்து ரத்தம் வாயில் வழிய வரும் நாயின் முகத்தில் தெரியும் மகிழ்ச்சி... நண்பனே! துப்பாக்கி இருந்தால் தான் உன் ஆளுமை முழுமை பெறுகிறது.. துப்பாக்கி இல்லாமலே நான் மனிதன் தான். உன்னிடம் துப்பாக்கியும் என்னிடம் கடவுள் தந்த மூளையும் இதயமும் இருக்கிறது. ஒருவரிடம் இருப்பது மற்றவரிடம் இல்லாததால் தான் இவ்வளவு தொல்லையும்...

நண்பனே, உன் முயற்சியில் முயலைப் பிடித்து எஜமானிடம் கொடுத்து அவனிடமே எலும்புத்துண்டுகளுக்காக காத்தி ருக்கும் உனக்கு விசுவாசம் நிறைய உண்டு. அந்த எலும்புத்துண்டுக்கும் நீ நாக்கை நீட்டி வாலை ஆட்ட வேண்டியிருக்கிறது. இதை எல்லாம் நீ சிந்திக்க முன் உனக்கு எலும்புகள் கிடைத்துவிடும். அந்த அற்ப சந்தோசத்தில் நீ உன் சிந்தனையையே

www.tamilarangam.net

மறந்து போவாய். முயலைப் பிடிக்கும் உனக்கு எதற்காக முயலின் விடுதலை? உன்னையே ஏமாற்றிக் கொள்ளாதே நண்பனே.

நேராக நிற்க முடியாமல் தொங்கும் என்னை கயிறுகள் தாங்கிக் கொள்கின்றன. என்னை மயக்கம் ஆட் கொள்கிறது. என் வாயிலே வழிந்த இரத்தத்தை சுவை பார்க்க இலையான்கள் மொய்க்கின்றன. நான் மெதுவாக மரணித்துக் கொண்டிருக்கிறேன். நான் முனகிக் கொள்கிறேன். மயங்கிப் போகிறேன். நினைவு மீண்டும் வந்தது. இருளில் ஒரு மூலைக்குள் நான். நான் எங்கே? இறந்து விட்டேனு? நிருபிப்பதற்காக காலை அசைக்க முயற்சிக்கிறேன். அசையவே இல்லை. பயந்து போகிறேன். நான் இறந்து விட்டேனு? எனக்குள்ளே ஏதோ ஒன்று துடித்துக் கொண்டிருக்கின்றது. குற்றுயிரான நிலையிலும் ஒரு அற்ப சந்தோசம். நான் மரணிக்கவில்லை. அம்மா! என் உடல்படும் வேதனையை விட மோசமாக உன் இதயம் வேதனைப்படும். நாக்கு வரண்டு கிடக்கிறது. மெதுவாக உமிழ்நீரால் உதடுகளை ஈரமாக்குகிறேன். மண்டைக்குள் ஏதோ வலிக்கிறது. ஆயிரம் ஆயிரம் தேனீக்கள் ரீங்காரமிட்டு என்னைக் கொட்டுவது போன்ற பிரமை. நான் மீண்டும் நித்திரையாகிறேன். இல்லை. மரணிக்கிறேனு? அந்தப் பயத்திலுலேயே நித்திரை வர மறுக்கிறது. கதவு திறக்கிறது. அறையை ஒளி நிறைக்க என் கண்கள் கூசிப் போகின்றன. என் முகம் வீங்கி என் கண்களையே திறக்க முடியாதபடி என் இமைகள் நொந்து போகின்றன. மெதுவாக வந்து ஒருவன் என் முகத்திலே தண்ணீரால் துடைத்து விடுகிறுன். நண்பனே! நிச்சயம் உன் கைகளில் இருந்து முரட்டுத்தனம் நிச்சயம் உன் இதயத்தில் இல்லை. தண்ணீரும் அவனுடைய கைகளும் இதமாகத்தான் இருக்கின்றன. அவன் மெதுவாக ஒரு கோப்பையில் நீர் நிறைத்து எனக்கு பருக்குகிறுன். நண்பனே! இந்த மிருகங்களுக்கு நடுவில் எதற்கு மனிதனுகிய நீ? கண்களைத் திறந்து பார்க்கிறேன். அந்த முகத்தில் கொடூரம் இல்லை. இலட்சியம் இருந்தது. அதற்கான சிந்தனையும் இருந்தது. ஆனுல் மௌனமும் இருந்தது. நண்பனே! நீ சிந்தித்திருக்கிறுய். அதனுல்தான் உனக்கு மௌனம். ஆனுல் உன் மௌனம் கூட இந்த அநீதிக்கு துணை போகிறதே. நண்பனே! நீ உன் மண்ணும் மக்களும் தலைநிமிர்ந்து நடக்க கனவு கண்டாய். உனக்கு உன் சொந்த நலன்களையும் துறந்து நீ.. எதிர்காலத்தையே தூக்கி எறிந்த நீ.. இன்று ஒரு கூலிப்படை போல. உன்னைப் போல் என்னுல் ஆயுதம் தூக்க முடியவில்லை. ஆனுல் என்னுல் மௌனமாகவும் இருக்க முடியவில்லையே. நொந்து போன என் இமைகளுக்கால் கண்ணீர் வழிகிறது. உன்னைப் போல எத்தனை பேர் மனச்சாட்சியை மூட்டை கட்டி வைத்து விட்டு... அநீதிக்கு துணை போகிறீர்கள். மக்களுக்காக உயிரைக் கொடுக்க தயாராகப் புறப்பட்ட நீ.. மௌனமாய் இருக்காதே. நீ கூலிப்படை அல்ல. நீ தான் உண்மையான விடுதலைப் போராளி.

வெளியே சலசலப்பு கேட்கிறது. அவன் விளக்கை அணைத்து விட்டு வேகமாய் வெளியேறுகிறுன். பேச்சுக்குரல்கள். மீண்டும் ஒளி நிறைக்க.. மீண்டும் லெப்டினன்ட். மீண்டும் விசாரணை. நீதியைக்காக்க அல்ல. பதவிகளைக் காக்க. நியாயப்படுத்தல்கள். "நாங்கள் எங்கள் உயிரை வெறுத்து உங்களுக்காக போராடுகிறோம்" நண்பனே, உன்னை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நீயே ஏமாற்றிக் கொள்ளாதே. எங்களுக்காகப் போராடும் நீ எப்படி உன் உடன்பிறப்புக்கு எதிராக ஆயுதம் தூக்குவாய்? இப்படித்தான் வாழவேண்டும் என்பது நீ எடுத்த முடிவு. அந்த வாழ்வில் நீ மரணத்தை ஒவ்வொரு கணமும் தரிசிக்க வேண்டும் என்பது நீ அறிந்திருக்க வேண்டிய உண்மை. ஆனுல் நான் உணர்ந்திருக்கிறேன். மரணத்துக்கு அஞ்சியிருந்தால் நான் மௌனமாய் இருந்திருப்பேன். நீ எங்கள் விடிவுக்கு போராடினுல், அதற்காக உயிர் துறந்தால் நீ இறந்த பின்பும் எங்களால் நேசிக்கப்பட வேண்டியவன். நீ உன் நோக்கத்தையே மறந்து இன்று உன் இனத்தையே அழிக்கும் போது எப்படி நான் உனக்குத் துணைபோவேன்? நண்பனே! உன் புனிதத்தை நீயே கெடுத்துக் கொண்டாய்.

மாறி மாறி என்னைப் பலகையால் தாக்க நான் நினைவிழந்து போகிறேன். என் காயங்களில் வெடிமருந்தைத் தடவி எரிக்க... எனக்கு இப்போது வலிக்கவில்லை.. குறடுகளால் என் கன்னத்து மயிர்களை பிடுங்க... என் கண் ஓரங்களில் நீர் வழிகிறது. கூரையில் உள்ள நிலையில் என்னைத் தலை கீழாகக் கட்டி... தொங்க விட்டு. .. எல்லோரும் மாறி மாறி அடிக்க... இங்காவது இவர்கள் ஜனநாயக உரிமைகளைப் பேணுகிருர்கள். இப்போது நான் இறந்து விட்டேனு? இன்னும் உயிரோடு இருக்கிறேனு? நான் முடிவு செய்ய முடியாதபடி மயங்கிப் போகிறேன். அவர்கள் சலித்துப் போகிருர்கள். எதற்காக என்னை உயிரோடு வைத்து அலட்டிக் கொள்ள வேண்டும்? கொலைகள் என்பது இன்று உணவு போல. தவிர்க்க முடியாதது. அவர்களுக்கு உயிர்களை விட நேரம் பொன்னுனது. "ஆளை மண்டையில் போடுவம்" வெறும் மனித உயிர். விலை இழந்து போகிறது. சிறு வயதில் வேள்விக்கு வரும் கடாக்கள் படும் வேதனை கண்களில் வருகிறது. ஒரு தடவை மூன்று முறை வெட்டியும் உயிர் போகாமல் துடித்த ஆடு... அதைக் கண்டு எப்படி நான் துடித்துப் போனேன்? இன்று நான் துடித்துப் போகும்போது பார்த்து சிரித்துக் கொள்வதற்கு எத்தனை உயிர்கள்? மிருகங்களின் உயிர்களுக்காக பரிதாபப்பட்டு உயிர்க் கொலையை நிறுத்தி வைத்த எம் மக்கள் இன்று இந்த உயிர்க் கொலைகளையே கண்டு மௌனமாகி... துப்பாக்கிகள் நியாயத்தைக் கொன்ற பின் தான் மக்கள் மேல் கை வைக்கத் தொடங்கியிருக்கின்றன.

என்னை இழுத்துச் சென்று வைரவரின் முன்னுல் கட்டி வைரவருக்கு பலி கொடுக்க ஆயத்தமாகிருர்கள். கண்களை லேசாகத் திறந்து பார்க்கிறேன். எனக்கு தண்ணீர் தந்த நண்பன் எந்த சலனமும் இல்லாமல் நிற்க.... அவன் கண்களை ஊடுருவுகிறேன். அவன் கண்களில் நீர் படர்கிறது. நண்பனே! உன் இதயத்தில் ஈரம் இருக்கிறது. தொடர்ந்து மௌனமாய் இருக்காதே. நான் இன்று இறந்து போகலாம். நண்பனே! உன்னைப் போன்ற உண்மையான தியாகிகளை நம்பித்தான் எங்கள் தலைமுறை இன்னமும் உயிர் வாழ்கிறது. நீ தவறுகளை நியாயப்படுத்தாதே. தவறுகளை ஏற்றுக் கொள். நண்பனே! தூக்கியெறி அந்த தலைமைகளை! உன் தலைவர்களை விட மக்களை நேசி! அமைப்புகளை விட நியாயத்தை நேசி!

லெப்டினன்ட் துப்பாக்கியை எடுத்து என் நெற்றியில் அழுத்தி மெதுவாக.... பெரிய ஜேம்ஸ் பொண்ட் பாணி.. அழுத்த... பொயின்ட் பிளாங்க். .. குண்டு என் மூளைக்குள் நுழைந்து.. . மெலிதான கணப்பொழுதில் நான்

(தொடர்ச்சி 22 பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேடகம் (நூலகம்)

## வகைதுறை வளநிலையம்

கனடா கலை இலக்கிய மன்றத்தினரால்
மொன்றியாலிலும் திறக்கப்பட்டுள்ளது

**இலங்கை, இந்தியாவிலிருந்து
பத்திரிகைகள் சஞ்சிகைகள்
தருவிக்கப்படுகின்றன**

கலை இலக்கிய மன்றம்
5497 A, விக்டோரியா அவனியூ
அறை இல:222
மொன்றியால்

---

தொலைபேசித் தகவற் சேவை

ரொறன்ரோ கல்விச் சபை உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் பல்வேறு பாடத்திட்டங்களை வழங்குகிறது.

*ஆரம்ப, உயர்கல்விப் பாடத்திட்டங்கள்
(Elementary and High School programs)
*பாலர் வகுப்புகள் (Kindergarten Classes)
*இலவச ஆங்கிலக் கல்வி
(Free English as a second Language classes)
*மரபுவழி மொழிக் கல்வி (Heritage Language classes)
*கோடைக்கால கல்வி (Summer School)

பாடத்திட்டங்கள் பற்றி மேலதிக விபரங்களையும்
ரொறன்ரோ பொதுப் பாடசாலை அமைப்பு
சம்பந்தமான விபரங்களையும்,

322-2028

என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்



**322–2028**

**TORONTO BOARD OF EDUCATION**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"திசை" வார இதழிலிருந்து மறுபிரசுரம் செய்யப்படுகிறது

# கோளறுப் பதிகம்

பார்வையாளர்களை அனுமதிக்கும் நேரம் முடிவடைந்துவிட்டது. அநேகமாக எல்லோரும் வெளியேறிவிட்டார்கள். மாலை மங்க ஆரம்பிக்கும் போதுதான் நான் உள்ளே நுழைந்தேன். ஆஸ்பத்திரிக்கே உரிய அந்த நெடி கனமாக வீசிற்று, கூடவே ஈக்களும் திரிந்தன. நான் O.P.D க்குள் நுழையும் தருவாயில் எனக்கப் பின்னே ஒரு கனமான வாகனம் உறுமியபடி வந்து நின்றது. தன்னிச்சையாகத் திரும்பிப் பார்த்தேன். ஒருகை வெளியே நீட்டிக் கொண்டிருந்தது. மணிக்கட்டுக்கு ஒரங்குலம் மேலே. ஒரு எலுமிச்சம் பழத்தைப் புதைத்து வைக்கலாம் எனத் தோன்றும்படி ஒரு பள்ளம் பதிந்திருந்தது. அதன் ஓரத்திலிருந்து கிழிபட்டுப்போன தோலோ,தசையோ ஒரு சாண் நீளமுள்ள ஒரு சிவந்த பேப்பர் நாடாபோன்று காற்றில் துடித்தது. மிகுதிக் கரம் முழுக்க காய்ந்த இரத்த ஓடைகள் கறுத்துப் போயிருந்தன.பள்ளத்திலிருந்து உறைந்த களிபோன்ற இரத்தம் சொட்டுச் சொட்டாக பாகுத்தன்மையுடன் ஒழுகித் தரையில் விழுந்தது. தரை அதை அவசர அவசரமாக விழுங்கிற்று. ஒரு ஸ்ரெட்சரில் பிரேதம் கிடத்தப்பட்டிருந்தது. மறு கரம் சேதமெதுவுமின்றிச் சுத்தமாக இருந்தது. ஆனல் வலிப்பினல் மிகவும் மறுக்கேறி ஸ்ரெட்சரின் ஓரத்தைப் பற்ற வளைந்தது போல் பாவனை காட்டிற்று. ஆனல் விறைப்பேறிய நிலையிலும் அந்தக்கரம் வாளிப்பாகவும் மென்மையாகவும் இருந்தது.

ஒரு பெண்ணின் பிரேதம்தான்.

சனங்கள் சிலர் கூடினர்கள், கூடவே ஈக்களும். ஒரு ஒடலிப் பையன்

www.tamilarangam.net

இன்னொரு ஸ்ரெட்சரை ஓசையெழத் தள்ளியபடி அவசரமாக வந்தான். தோசையைத் திருப்பிப் போடுவது போல அசிரத்தையுடனும், இலாகவத்துடனும் பிரேதத்தை தன்து ஸ்ரெட்சருக்கு புரட்டிப் போட்டுப் கொண்டு O.P.Dஐ நோக்கி ஓடினான். அவனுக்கு வீட்டுக்குப் போகும் அவசரம் போலும்.

அவ்வளவாக உயரமில்லை. சாதரணமாக பெண்கள் வீட்டில் அணியும் உடைகள் அணிந்திருந்தாள். முழங்காலுக்குக் கீழே உள்ள வாளிப்பான தசைப்பிடிப்பான கால்கள் விறைத்துப்போய் திகம் பரமாகத் தெரிந்தன. முகம் முழுக்க இரத்தவிளாறாக அடிக்கப் பட்டிருந்தது. இடது புருவத்துடன் கூடவே ஒரு குண்டு பாய்ந்திருந்தது. அவ்விடத்தில் ஒரு புடைப்பு. அதிலிருந்தும் இரத்தக் கூழ் ஒழுகிற்று. மற்றைய குண்டு இடது மார்பில் பாய்ந்திருக்க வேண்டும். சட்டையின் மேல் புறம், இரத்தத்தில் தோய்ந்திருந்தது. ஈக்கள் மிக ஆவலுடன் மொய்த்தன, கூடவே சனங்களும்.

சேதமாகிப் போன மேல் சட்டையினூாடு வெளுப்பான திரட்சியான மார்புத்தசைகள் தெரிந்தன. ஒரு ஆணின் கரத்தையோ, ஒரு குழந்தையின் இதழ்களையோ ஸ்பரிசித்தறியாத மார்பகங்கள்.ஆகக் கூடினால் இருபது வயதிருக்கலாம்.

O.P.D யிலிருந்து ஒரு டாக்டரம்மா ஸ்டெதஸ் கோப்பையும், வார்த்தைகளையும் சுழற்றி வீசிய வண்ணம் வந்தாள். அவளுக்கு நிறைந்த கவலையான முகம். கூடவே ஒருதாதி, முகம் முழுக்க பருக்களும் பீதியும .பிறகு சனங்களும் ஈக்களும்.

. சனங்களுக்கென்ன, எல்லாமே புதினம்தான்! ஈக்களுக்கு ருசி மிகுந்த சாப்பாடு!!

ஆளரவம் அடங்கிக் கொண்டிருக்கும் ஒடுங்கிய நீண்ட ஆளோடிகளினூடாக நடக்க ஆரம்பித்தேன். எனக்கு முன்னே நடுத்தர வயதைக் கடந்த மெலிந்த உயரமான ஒரு பெண்ணும், அவளைத் தாங்கியபடி வேறும் இரு பெண்களும் போய்க்கொண்டிருந்தார்கள். அந்தப் பெண்ணுக்கு தொடைகளில் ஏதாவது கட்டி புறப்பட்டிருக்க வேண்டும். வேதனையால் கூனிய முதுகுடன், கால்களைப் பதனமாக எடுத்துவைத்து தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டிருந்தாள். அவர்களைக் கடக்கும்போது ஓரப் பார்வை பார்த்தேன். அந்தப் பெண்ணின் முகத்திலுள்ள தசைகள் யாவும் ஒருவாறு கோணிப்போய் துடித்தன. வாயும் கண்களும் அகல விரிந்தன. கண்களில் அதிர்ச்சியும் ஏக்கமும் தேங்கிப்போய்க் கிடக்க, வாயில் சில வார்த்தைகளை வெளிப்படுத்த முயல்வதாய் மெல்ல அசைய உன்னியது.

அவளுக்கு நோயல்ல, துக்கம்! தாங்க முடியாத துக்கம். அழுது குழுறுவதால் மட்டும் அப்படியான துக்கங்களை வெளிக்கொணர முடியாது. அநேகமாக அவளது கணவனோ, குழந்தையோ எங்காவது குண்டு வெடிப்பிலோ, துப்பாக்கிச் சூட்டிலோ மிக மோசமாகக் காயப்பட்டிருக்க வேண்டும். இறந்து கூடப்போயிருக்கலாம். நான் ஒரு பத்தடி தூரம் கடந்திருப்பேன். பின்னாலிருந்து "ஐயோ ஐயோ ஐயோ" என ஈனஸ்வரத்தில் மூச்செடுக்க முடியாத அவதியுடனும் அவசரத்துடனும் ஒரு குரல் பிறந்தது. வரவர அதன் ஸ்தாயி கூடி உரத்த வீரிடல்களாகத் தெறித்தது. ஒடுக்கமான ஆளோடியின் இரு புறமும் உயர்ந்திருந்த சுவர்களுக் குள்ளும்,கூரையின் கீழும் திரிகின்ற

www.tamilarangam.net

அசுத்தமான காற்று அந்த அவலக்குரலினுல் மேலும் அசுத்தமாக்கப்பட்டு என் நெஞ்சில் புகுந்து கொண்டது.
இன்னும் ஒரு நொடிகூட அந்தக் காற்றை என்னுல் சுவாசிக்க முடியாது. என்னுல் எதையும் காணமுடியாது. அவசர அவசரமாக திரும்ப நடந்தேன்.
வெளியே சைக்கிள் பார்க்கின் முன்புறம் தேவனைச் சந்தித்தேன். வெகுகாலத்திற்குப்பிறகு அவனைக் கண்டதில் சிறிய மகிழ்ச்சியும், பெருவியப்பும் ஓங்க எய்தினேன். கூடவே கொஞ்சம் பயமும்......
தேவனை நான் கடைசியாகக் கண்டபோது ஒரு நாவலை எழுத ஆரம்பிப்பதாகச் சொன்னுன்.
"அரசியலிலை தோத்தவனும், புறமொதுக்கப்பட்டவனும்
இலக்கியத்திலோ அல்லது வேறேதாவது கலைத்துறையிலோ ஈடுபடவேண்டியது அவசியம்......மச்சான்" என்றுன்.
பிறகு, "அதுக்கிடையிலை நான் செத்தாலும் செத்துப்போவேன் போல கிடக்கு" என்றபடி "ஹோ....ஹோ" என போலிக்குரலில் சிரித்தான்.
கூடவே, "மாட்டான்....." என சங்கல்பமும் செய்தான்.
அதன் பின் இன்று தான் அவனைக் காண்கிறேன். முன்னரை விடக் கொஞ்சம் பருத்தும், உற்சாகமாகவும் இருந்தான். வழக்கம் போல இதழ்கள் சிவக்க, வாய் நிறைய வெற்றிலையைக் குதப்பி கொண்டிருந்தான். தேவனை நான் முதல் முதலாக கண்டபோது அவனது "அய்யா" வின் கைகளைப் பற்றிய வண்ணம் சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது சிலேற் மிகவும் பழையதாகவும அழுக்கேறிக் கீறல் விழுந்தாகவும் இருந்தது. புத்தகம் கூட மேலுறையை உரித்து விட்டும் பக்கங்கள் எல்லாம் ஓரம் மடிந்தும் காணப்பட்டது. எனது சிலேற்றும் புத்தகமும் புத்தம் புதியனவாய் மிளிர்ந்தன. புத்தகத்திலிருந்து புதிய காகிதத்தின் இனியமணமும். சிலேற்றிலிருந்து காய்ந்த வாடையும் வீசின.
தேவன் பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காக வருவது கிடையாது. வரும் நாட்களிலும் அநேகமாக வாங்கின் மீது ஏறி நிற்பது கட்டாயமாக்கப்பட்டது. எல்லாப் பாட வேளைகளிலும் அநேகமாக அடி வாங்கினுன். கணக்குப் பாட வேளைகளில் அகோர அடி விழுந்தது. ஆனுல் அவன் அழுவது கிடையாது கல்லுளிமங்கன் போல முழித்துக் கொண்டே நிற்பான்.அவன் மிகவும் சகிப்புத் தன்மை வாய்ந்தவன். எனினும், எட்டாம் வகுப்புக்குப் பிறகு அவன் பாடசாலைக்கு வரவில்லை.
அதன்பின், அவனது அய்யாவுக்குப் பின்னுல் அவனும் ஒரு பழைய, பெரிய "கரியர்" பூட்டிய சைக்கிளில் ஓலைப்பறியுடன் வலைகளைப் பொதிந்து ஏற்றியபடி முன்னுல் வளைந்தபடி உழக்கிக்கொண்டு "வீச்சு"க்குப் போகக்காண்பேன். அந்த நாட்களில்தான் அவன் வெற்றிலை போடப் பழகியிருக்கவேண்டும்.
தேவனது வீட்டிற்கு ஒரே ஒரு தரம் போயிருக்கிறேன். அது எங்களது வீட்டிலிருந்து முக்கால் மைல் துரம் தள்ளியிருந்தது. ஒரே ஓலைக் கூரையின் கீழான ஒரு சிறு அறையும், சற்றே அகன்ற காற்றேட்டமான மாலும்தான் வீடு. அறையின் பின் சுவர்கள் தென்னங்கீற்றுகளால் நெருக்கமாக அடைக்கப்பட்ட தட்டிகளினுல் ஆனவை. மாலுக்குள் கிடந்த தீராந்திகளிலும் வேலிகளிலும் வலைகள் கிடந்தது மீன் நாற்றத்துடன் நாறின. பக்கத்திலே இன்னுமொரு

www.tamilarangam.net

சிறு கொட்டில். அது அடுக்களை. அதற்குள் நுழைவதெனில் ஆள் பாதியாக மடியவேண்டும். எந்நேரமும் அத்னுள் புகை மண்டிச் சூழும்.

எனக்கு ஒரு பழையவலை அவசியமாகத் தேவைப்பட்டது. எங்களது தோட்டத்தில் நிறைய தக்காளிகள் இருந்தன. கிளிகளின் தொல்லை பொறுக்க முடியாமல் இருந்தது. வலை போட்டால் கிளி விழாது என் அப்பு ஆலோசனை சொன்னார். ஆனாலும் ஒரேயொரு கிளி யாவது வலையில் விழவேண்டும் என நான் உள்ளூர ஆசை வைத்திருந்தேன். தேவனிடம் வாங்கப் போகும் வலையில் சிறு துண்டொன்றை வெட்டியெடுத்து "கிளிக்கூண்டு" ஒன்றை செய்யும் உத்தேசம் எனக்கிருந்தது. அந்த வலையை கிளிகள் அறுக்கமாட்டா, என இரண்டுங்கெட்டான் வயதிலும் பேதமையுடன் நான் நம்பினேன்.

மாலியின் ஒரு மூலையில் ஒரு பழைய "சன்லைட்" பெட்டியும், அதற்குள் புத்தகங்களும் கிடந்தன. அவையெல்லாம் தேவனின் புத்தகங்கள். பள்ளிக்கூடத்தில் மாடுபோல அடி வாங்கிய, தேவனால் இவ்வளவு புத்தகங்களை படிக்க முடிகிறதா?

பிற்காலங்களில் அவனை அடிக்கடி இலக்கியக் கூட்டங்களில் காண நேர்ந்தது. நான் எண்ணியது போல தேவன் மக்கு அல்ல. அவனது புலன்களும் புத்தியும் வேறு திசைகளை நோக்கித் திருப்பப்பட்டிருந்தன.

இன்னும் கொஞ்சக் காலம் போனதும், அவனது சைக்கிளின் பெரிய "கரியர்" கழற்றி வைக்கப்பட்டது. அவனது "அய்யா"விற்கும் அவனுக்கும் ஒத்து வரவில்லை. தேவனின் சைக்கிள் விரைந்து செல்லத்தக்கவாறு உருமாற்றப்பட்டது. அத்துடன், ஹான்டிலில் ஒரு பெரிய துணிப்பை தொங்கிய வண்ணம் இருந்தது. அது சிறியது. ஆனால் கனமான சில பொருட்களைச் சுமந்தது.

ஒரு நாள், அவனது வீட்டின் பக்கமாக இருந்து பெரும் இடியோசை போன்ற சத்தத்துடன் கூடவே புகை மண்டலம் எழுந்தது. தீயில் கருகிய சருகுகள் வெகு தூரத்துக்குக் கிளம்பி காற்றினால் அடித்து வரப்பட்டதையும், பலர்கூடி சத்தமிடுவதையும் கேட்டேன். அதற்குப் பிறகு வெகுநாட்களாகக் தேவனைக் காணவில்லை. அவனது "அய்யா" "அவனைக் கண்ட இடத்திலை வெட்டுவேன்" எனச் சொல்லித் திரிந்தார். அவர்களது சொற்ப சொத்துக்களான வலைகளும், அந்தச் சிறிய கொட்டில் வீடும், துணிமணிகளும், தேவனது புத்தகங்களும் அந்த விபத்தில் நாசமாய்ப் போயின.

அதற்குப் பிறகு, "ஒப்பந்தம்" முடிந்த கையோடே அவனை புத்தகக் கடையொன்றின் முன் கண்டேன். அப்போதுதான் அவன் நாவல் எழுதிக் கொண்டிருக்கும் விஷயத்தைச் சொன்னான். அன்று முழுக்க வெற்றிலை போடவில்லை என்றும் சொன்னான். மிக மெலிந்து போய் இருந்தான். என்னிடம் கொஞ்சம் காசு "கடன்"வாங்கினான். அதற்குப் பிறகு இன்று தான் காண்கிறேன். என்னுடன் தங்குவதற்குத் தேவன் விரும்பினான்.

நான் குடியிருக்கும் வாடகை வீட்டில் பேய்களும் அத்துமீறிக் குடியேறி விட்டதாகச் சொல்கிறார்கள். வீடு மிகப் பெரியது. புதிய "பாஷனில்" அமைந்திருந்தது. மேல் மாடியில் நான் மட்டும், கீழே ஒரு இளந்தம்பதிகளும், அழகிய துடியான பெண் குழந்தையும், வீட்டின் முன்புறம் "பாஷசனுக்கு" சற்றும் பொருந்தாத வகையில் ஒரு நீற்றுப் பூசணிக்காயில் குங்குமத்தினால் வரைந்த

www.tamilarangam.net

கோரமுகம் தொங்கியது. பேய்களுக்கு "சாந்தி" செய்வித்ததை அது கட்டியங் கூறிற்று. "சாந்தி" செய்த பிறகு பேய்கள் வாலைச் சுருட்டிக் கொண்டனவாம்.
அதற்கு முன்னரோவெனில், தினம் தினம் இருட்டியதும் தாகத்துடன் யாரோ நாவைச் சப்புக் கொட்டுவதும், அங்கும் இங்கும் "தடபட" வென ஒடித்திரிவதும், உபாதைகளுடன் முனகுவதும் என சத்தங்கள் கேட்குமாம். கதவுகளும் ஜன்னல்களும் தம்பாட்டில் திறந்து "படார்" என சாத்திக் கொள்ளுமாம்.
எனது அறையின் ஜன்னலைத் திறந்தால், பூஞ்செடிகள் வரிசையாக வளர்ந்திருந்த முற்றமும், சுற்றுமதிலும், அநேகமாக மௌனமாகவே இருக்கும். பாதையும் தெரியும். கதவைத் திறந்தால், கால்வட்டமாக வளைந்தபடி மாடிப்படிகள் இறங்கி ஹோலுக்குள் போவதைக் காணலாம். அந்தக் கால்வட்ட விளிம்புடைய சுவரின் சரி பாதியில் ஒரு கண்ணாடி அலுமாரி போல உள்வாங்கிய பீடம் இருக்கிறது. அதற்குள் செம்மஞ்சள் ஒளியில் குளிக்கின்ற கண்ணன் சிலை. வேய்ங்குழலை உதடுகளில் பொருத்தியபடி குறுஞ்சிரிப்புச் சிரிக்கிறது.
அந்தக் கண்ணன்சிலை, இதே வீட்டில் முன்பு நடந்த கோரங்களுக்குச் சாட்சியாக அப்போதும் குழலூதிச் சிரித்திருக்க வேண்டும். வீட்டின் சுவர்களில் எல்லாம் துப்பாக்கிக் குண்டுகள் மழையெனப் பொழிந்ததில் மேற்பூச்சுக்கள் புண்பட மூளியாகிப் போயினவாம். இதே மாடிப்படிகளின் வழியாக இரத்த ஓடை குதூகலத்துடன் கீழிறங்கிப் போயினவாம். உட்கட்சிப் போராட்டத்தை சில துப்பாக்கிக் குண்டுகள் சந்தித்து முடித்து வைத்தனவாம். மொத்தமாக பன்னிரண்டு பேர்கள் ஒரே இரவில் சில நொடிகளுக்கள் கட்சியினின்றும் உலகத்தினின்றும் வெளியேற்றப்பட்ட பின் மயான அமைதி நிலவிற்றும். அதற்குப் பிறகு அந்தப் பன்னிரண்டு பேரும் பேய்களாகி விட்டார்களாம். இல்லாத தொந்தரவுகள் எல்லாம் உண்டாக்கிக் காட்டினுர்களாம். இரவானதும் சந்தடிகள் மிகச் செய்து தமக்கிழைக்கப்பட்ட அநியாயத்தைச் சொல்லிப் புலம்பினுர்களாம்.
பிறகு குடியிருக்க வந்தவர்கள் சாந்தி செய்தார்கள். எனக்கும் குடியிருக்க ஒரு அறையும், கொஞ்சம் பயமும் கிடைத்தன.
எனக்குப் பேய் பிசாசுகளில் அவ்வளவு நம்பிக்கை இல்லை. தேவனுக்கும் இதையெல்லாம் சொன்னேன்.
"எனக்கும் இப்ப ஒண்டிலும் நம்பிக்கையில்லை மச்சான்" என்றுன். தேவனின் "அய்யா" வின் தகப்பனுர் இப்போது இறந்துவிட்ட அப்பு பல பேய்க்கதைகளைத் தேவனது சிறுவயதினில் சொல்லியிருக்கிருராம். அடிக்கடி அவர் பல பேய்களை பேய்க்காட்டிவிட்டு வெறும் பறியுடனும் காய்ச்சலுடனும் வீட்டுக்குத்திரும்பி வந்திருக்கிருராம்.

ஒருநாள், நல்ல நிலவு. அப்பு விடிகாலையில் வீச்சுக்குப் போக ஆயுத்தங்கள் பண்ணி விட்டு படுக்க எண்ணிஞர். வெள்ளி காலிக்கும்போது கனகன் வந்து கூப்பிடுவதாகச் சொல்லியிருக்கிறுன். அப்பு ஆச்சியிடம் சொல்லி விட்டு அண்ணுந்து முகட்டு வளையைப் பார்த்தபடி படுத்திருக்கிருர்.அன்றிரவு நாய்கள் மிகுதியாகக் குரைத்தன. ஆச்சி சுருட்டுப்பிடித்தபடி கால் உளைவு போக்க முணுமுணுத்தபடி தைலம் தடவுகிருள். சுருட்டின் கார நெடியுடன் தூங்கிய அப்பு குறட்டை விடலானுர். "எடேய்....கந்தப்பு.....வாடா...."எனக்

www.tamilarangam.net

கண்டாயத்திலிருந்து கனகன் கூப்பிடுவது போலக் கேட்கிறது. அப்பு எழுந்து ஒரு மிடறு தண்ணீர் குடித்தார். வலைகளைத் தூக்கித் தோளில் போட்டவண்ணம் ஆச்சியைப் பார்த்தார் ஆச்சி நல்ல நித்திரை. தலைமாட்டில் குறைச் சுருட்டு கருகிப்போய்க் கிடக்கிறது. தீப்பெட்டியும், சுருட்டும், வெற்றிலை கொட்டப் பெட்டியும், திருநீற்றுச் சம்புடமும் வில்லுக்கத்தியும் எடுத்து "மடியில்" பொதிந்து கொண்டு அப்பு முற்றத்தில் இறங்கினார். நிலவு வெளிச்சத்தில் கண்டாயத்தடியில் யாரோ நிற்பது தெரிகிறது.

"எடேய்... கந்தப்பா...." என கரையிலிருந்து குரல் கேட்கிறது அப்பு மடியைய் தடவிய வண்ணம் அவனுடன் போய்க் கொண்டிருக்கிறார். நிலவு வெளுறி ஒளியிழக்கிறதோ? அப்பு வானை நிமிர்ந்து பார்த்தார். விடிவெள்ளி காலிக்க இன்னும் நிறைய நேரம் இருப்பதாகப்பட்டது. பக்கத்தில் வருபவன் சுண்ணம்பு கேட்கிறான். சுண்ணம்பு எடுத்துக் கொடுத்த போதுதான் கனகனுக்கு கால்கள் இல்லாததை அப்பு கண்டார். விக்கித்துப் போனார். தேகம் "ஜில்"லிட்டுக் குளிர்ந்தது. எவ்விடத்தில் நிற்கின்றோம் என சுற்று முற்றும் பார்த்தார். எதிரே தண்ணீர் மினுங்கிறது. குளிர் காற்றை அள்ளித் தெளிக்கிறது. மறுபடியும் பக்கத்தில் பார்த்தால், கூடவந்தவனைக் காணோம்.

"கந்தப்பா வீசடா வீசு நல்ல மீன்படும் என அசரீரி மட்டும் கேட்கிறது. அப்பு அவதியுடன் நீருக்குள் இறங்கினார். "தொளப்" தண்ணீர் குழுப்பத்துடன் ஒலியேழுப்ப, மேலும் மிரண்டார். அரையில் கட்டியநான்கு முழத்தையும் "மடியின்" பாரங்களையும் சேர்த்து தலையில் முண்டாசாகக் கட்டிக்கொண்டார். திருநீற்றை எடுத்து நெற்றியில் தரித்துக் கொண்டு "வைரவா" என உளமுருகி உரைக்கக் கூவினார்.

"கந்தப்பா....கந்தப்பா...." என கரையிலிருந்து குரல் நைச்சியம் பண்ணிக் கூப்பிடுகிறது. அப்புவுக்கு தேவாரங்கள் நல்ல மனம். கோளறு பதிகத்தை வரிசை கிரமமாக பக்திலயத்துடனும், பயத்தால் நடுங்கும் துரலுடனும் பாடத் தொடங்கினார். பாடுகிறார்.... பாடுகிறார்... பயம் பறக்கிறது. விடிவெள்ளி மெல்ல உதயமாகி அப்புவுக்குதைரியம் சொல்லிற்று தூரே ஊரிலிருந்து கோழிகள் கூவி அப்புவிற்கு சுருதி சேர்த்தன. அப்பு கோளறு பதிகத்தை திரும்பத் திரும்பப் பாடுகிறார். கிழக்கு வெளுக்கிறது. மேனி விரைக்கிறது அப்பு தைரியமாக கரையில் ஏறினார். உடல் நடுங்குகிறது நடுங்கிய படியே வீட்டில் வந்து விழுந்தவர்தான். ஒரே குலைப்பன் காய்ச்சல்!

(அடுத்த இதழில் முடியும்)

***உண்மையான மனிதன் வசதியான பாதையை நாடமாட்டான். கடமையுள்ள பாதையே தேடுவான்.அவன்தான் செயல் திறன் உள்ள மனிதன்.அவனது இன்றைய இலட்சியங்கள்தான் நாளைய சட்டங்கள்.***

www.tamilarangam.net

# எதிரியுடன் கொண்டாட்டம் எமக்கோ திண்டாட்டம்

சங்கரி

எமது நாட்டில் நடந்துகொண்டிருக்கும் அரசியல் களேபரங்களுக்குக் காரணங்கள் கண்டறியும் முயற்சிகளில் நாம் ஈடுபடும் போது, அந்த அரசியல் தலைமைகளின் சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமற்ற கருத்துக்களை நாம் அவதானிக்கலாம். 40களின் பின்னர் அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள், எதுவிதமான புரட்சிகரமான மாற்றங்களையும் தமிழரிடையே ஏற்படுத்தியதாக தெரியவில்லை. தமிழர்கள் எப்போதும் வெள்ளையர்களின் எசமானத்துவங்களின் கீழ் வேலை பார்க்க விரும்பினார்கள். தமிழர்கள் எப்போதும் முதலாளித்துவ சிங்களத் தலைமைகள், தேசிய சிறுபான்மை இனங்களுக்கு எதிராக நடந்து கொண்ட எலலாச் சந்தர்ப்பங்களிலும், ஆதரவு கொடுத்தே வந்திருக்கிறார்கள்.

1915ல் முஸ்லிம்களுக்கு எதிரான கலகத்தின் போது, இலங்கைத் தமிழர்கள் சிங்கள முதலாளித்துவ தலைமைகளையே ஆதரித்தார்கள். சேர்.பொன். இராமநாதன் போன்றோர் D.S சேனநாயக்கா, பாரன் ஜயதிலக, டொன் கரோலில், D.சொய்சா போன்ற சிங்கள தனவந்தர்களைக் காப்பற்றத்தான் பாடுபட்டார்கள். இதனால் அவர்கள் தமக்குச் சில சுயலாபங்களைச் சம்பாதிக்க முடிந்ததே தவிர, தமிழ் இனம் என்ற வகையில் எமக்கு எது வித பலனும் இருக்கவில்லை.

1930களின் பின்னர் மலையாளிகளுக்கு எதிராக சிங்களவர் கலகம் செய்தனர். தொழிலாளருக்காகப் பரிந்து பேசிய A.E குணசிங்கா தலைமையில் கேரளத் தொழிலாளர்களை எதிர்த்து செய்த கலவரத்தின் போது, தமிழ்த் தலைமைகள் மலையாளத் தொழிலாளருக்காகப் பரிந்து பேசவில்லை. A.E குனசிங்காவைத்தான் தமிழ் தலைமைகள் ஆதரித்தன. மலையாளிகளின் தேனீர்க் கடைகளில் சிங்களவரும், இலங்கைத் தமிழரும் தேனீர் அருந்த ஒரே கோப்பையைத்தான் உபயோகித்தனர். அந்த எடுபிடித தனமான "கௌரவத்தை" பெரிதாகத்தான் தமிழ் முதலாளிவர்க்கம் கருதியது. ஏனென்றால் அப்போது யாழ்ப்பாணத்தில் தாழ்த்தப்பட்ட தமிழ்ச் சமுகத்தினர் மிகவும் மோசமான அடக்கு முறைகளை அனுபவித்தனர். உயர்சாதி தமிழர்கள்தான் அரச வேலைகளிலும், அரச அதிகார மட்டத்துடனும் உறவாடிக் கொண்டிருந்தனர். தமது மக்களையே அடக்கி ஒடுக்கிய அதே வர்க்கம் சிங்களவர்களின் அடக்கு முறைகளை ஆதரிக்கவே செய்தது.. அதுதான் முதலாளித்துவ வர்க்க உடன்பாடு.!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ், சிங்களப் பிரச்னே அந்தச் சந்தப்பங்களில் எழவே இல்லே. 1948ம் ஆண்டு இந்தியாத் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமை பறிக்கும் சட்டம் அப்போதைய தமிழ் தலைமையினுல் ஆதரிக்கப்பட்டது. அதற்கு சன்மானமாக மந்திரிப்பதவி கிடைத்தது. அந்த நடவடிக்கையை எதிர்த்தே தாம், வெளியேறி புதுக் கட்சி அமைப்பதாகவும் பறைசாற்றிய செல்வநாயகம் கோஷ்டி அந்த தோட்டத் தமிழருக்காக என்ன போராட்டம் நடாத்திஞர்களோ தெரியாது. ஆனுல் "ஸ்ரீ" எதிர்ப்பு போராட்டம் நடத்திஞர். பலன் என்ன தெரியுமா? 58 கலவரத்திஞல் தமிழர்கள் சிலரின் முதுகில் சிங்கள "ஸ்ரீ குத்தப்பட்டது தான். பின்னாட்களின் செல்வநாயகம் தவிர்ந்த அனைத்து தமிழ் "வீரர்களும" "ஸ்ரீ" போட்ட காரில் பவனி வந்தார்கள். அது கௌரவத்தின் சின்னமாகவே மாறிவிட்டது. இவர்களின் கொள்கை முழக்கம் இவ்வளவுதான்.

1965ம் ஆண்டு அமைக்கப்பட்ட தேசிய அரசில் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி, ஐ. தே.க. ம.ஐ.மு என்பன அங்கம் வகித்தன. "தமிழரின் தோலில் செருப்பு செய்து போடுவேன்" என்ற K.M.B ராஜரத்தினவும் இந்த அரசில்தான் அங்கம் வகித்தார். அப்போது இந்த சிங்கத் தமிழருக்கு ரோசம் வரவில்லே. இப்படியான தலைவர்களுடன் இவர்களே உறவுக்குத் தூண்டிய காரணம்தான் என்ன? "சோரம் போதல்" என்பது அரசியலில் இந்த சம்பவங்கள்தான். மக்களிடம் வாக்கு வேட்டைக்காக சில துவேஷமான சமாச்சரங்களே கூறிவிட்டு தேர்தல் முடிந்தவுடன் இவர்கள் அதே தலைமைகளுடன் உறவாடுவதும் முதலாளித்துவ ஒருமைக்கான அத்தாட்சியே. இவ்வாறு முதலாளித்துவ சக்திகளுடன் உறவாடும் இவர்களுக்கு தமிழ் மக்களின் நலன் பற்றிய அக்கறையை விட தமது நலன்தான் பெரிதாகிவிட்டது. சாதாரண உழைப்பாளி மக்களே விட முதலாளித்துவம் சார்பான சிறுபான்மையின் நன்மைகளுக்கே இந்த அரசியல் தலைமைகள் பாடுபட்டன. இதனுல்தான் தமிழ் தலைமைகள் இடது சாரிகளுடன் எதுவித கூட்டும் வரலாற்றில் வைத்தது கிடையாது.

தமிழ் மொழிக்கு எதுவித அந்தஸ்தும் கொடுக்காத முதலாளித்துவ ர,N.P உடன் "50 க்கு 50" கேட்டவர்களும், "சமஷ்டி" கேட்டவர்களும், "தமிழ் ஈழம்" கேட்டவர்களும் சங்கமமாகிப் போனுர்கள். இதனுல் ஏமாந்து போனவர்கள் சாதாரண தமிழ் மக்கள்தான். சிங்களவருடன் ஐக்கியமாக இருந்த சாதாரண தமிழ் மக்கள் இன்று பகைவர்களாகி விட்டதுடன் பொருட்சேதம், . உயிர்ச்சேதம் என்பனவற்றை அடைந்து சொல்லொணுத் துன்பங்களுக்கு மத்தியில் சீவியம் செய்கிறுர்கள்.

"முதலாளித்துவ ஒற்றுமை" என்பது எதிரிகள், போராட்டம், .விடுதலை, என்பனவற்றைக் கொச்சைப்படுத்தி, கேவலமாக்கி உள்ளது. முதலாளித்துவத்தை காப்பாற்றும் நடவடிக்கைகளாகத்தான் இனவாதம், மொழிவாதம் என்பன கிளப்பிவிடப்படுகின்றன என்ற உண்மைகளே நாம் உணர்ந்து கொள்வது முக்கியமானதாகும். இலங்கையில் தமிழர்கள் உருப்படியான வாழ்வொன்றை நிர்ணயிக்க முதலாளித்துவ தலைமைகளே இனங் கண்டு அவற்றை ஆதரிக்காமல் விட வேண்டியது எம் கடமையாகும்.

☆ ☆ ☆ சங்கரி

www.tamilarangam.net

# மக்கள் விடுதலை முன்னணியும் தேசிய இனப்பிரச்சனையும்(3)

சென்ற இதழ் தொடர்ச்சி

தற்போது பெடரல் முறையை மட்டுமல்ல அதற்கு மிகவும் குறைவான அதிகாரங்களைக் கொண்ட மாகாண சபையைக் கூட மக்கள் விடுதலை முன்னணி எதிர்க்கிறது. அப்படியாயின் மக்கள் விடுதலை முன்னணியின் ஆட்சியில் தமிழ் மக்கள் பெற்றுக் கொள்ள "கொடுத்து வைத்தது" தான் என்ன? மக்கள் விடுதலை முன்னணியின் பிரதேச சுயாட்சி தான் என்ன?

மாகாண சபை போன்ற மிகவும் வரம்புக்குட்பட்ட சுய நிர்வாகத்தை வழங்குகின்ற ஆகக் குறைந்த தீர்வுக்கே எதிராயின் இதிலிருந்து நாம் காணக்கூடியது என்ன? மக்கள் விடுதலை முன்னணி தமது அரசியல் ஆதிக்கத்துள் தமிழ் மக்களை பலாத்காரமாக தடுத்து வைக்கும் தேவையையும், சிங்கள முதலாளித்துவ ஆட்சியாளர் செயற்பட்டவாறு செயல்படுவதற்கான அதன் தயார் நிலையையுமே காணமுடிகிறது.

தேசிய இனப் பிரச்சனைக்கு இராணுவ ரீதியான தீர்வு இல்லை எனவும் அரசியல் தீர்வு காணவேண்டும் எனவும் விஜேவீர பல தடவைகள் கூறினார். பிரச்சனைக்கு அரசியல் தீர்வு வழங்க வேண்டுமாயின் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தும் போது மக்கள் விடுதலை முன்னணியால் நாடு பூராவும் ஒட்டப்பட்ட சுவரொட்டிகளில்

உமாவுக்கும் பிரபாவுக்கும் விருந்து உபசாரம் இராணுவத்திற்கும் பொலீசுக்கும் வெடி குண்டு எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. ஈழம் பயங்கரவாதிகளுக்கு கப்பம் வழங்க திருட்டுத்தனமாக பேச்சு வார்த்தைகள் நடைபெறுவதாக மக்கள் விடுதலை முன்னணி இப் பேச்சு வார்த்தைகளை அறிமுகப்படுத்தியது. இதன் அர்த்தம் என்ன? ஸ்ரீ லங்கா அரசாங்கம் தமிழ்க்குழுக்களுடன் பேச்சு வார்த்தைக்குச் செல்வது பிழை என்பதாகும். பேச்சு வார்த்தை நடாத்துவது கப்பம் வழங்குவது என்றால், வேறு என்னதான் செய்ய வேண்டும்? அவர்களை அடக்க வேண்டும் என்பதைத் தானே இது காட்டுகிறது. அரசியல் தீர்வைப்பற்றி பேசும் அதேவேளையில் மறைமுகமாகக் கூறுவது போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ்ச் சக்திகளை அடக்க வேண்டும் என்பதையேயாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் பிரச்சனைக்கு யுத்த மூலம் தீர்வு காணவேண்டும் என்பதையேயாகும். இக்குழுக்களை அடக்கும்படி விஜேவீர வெளிப்படையாகவே பிற்காலத்தில் கூறினார். 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ம் திகதி "இச் சதிகாரர்களை அம்பலப் படுத்துக" என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் அரசியற் குழு பிரசுரத்தில் "எந்தவொரு ஈழம் வாதியுடனும் மக்கள் விடுதலை முன்னணியின் எவரும் பேச்சு வார்த்தை நடத்தவில்லை என்பதை உறுதிப்படுத்துகிறோம். எக்காலத்திலும் பேச்சுவார்த்தை நடாத்த மாட்டோம் என்பதையும் உறுதியாகக் கூறுகிறோம்." எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. 1983ம் ஆண்டு அக்டோபர் மாதம் விஜேவீர

www.tamilarangam.net

கூறிய வாறு வடக்குப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு வழங்கப் போவது வடக்கில் போராடும் சக்திகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமலேயா? மக்கள் விடுதலை முன்னணி தான் எதைத் தீர்வு எனக் கருதுகிறதோ அதனை பலவந்தமாக தமிழ் மக்கள் மீது திணிக்க எண்ணுகிறதா? போராடிக் கொண்டிருக்கும் சக்திகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி அவர்களது அங்கீகாரத்தைப் பெறுமல் வழங்கக் கூடிய அரசியல் தீர்வு தனி நாட்டை அங்கீகரிப்பது மட்டுமேயாகும் பேச்சுவார்த்தை நடாத்தாமல் வழங்கக் கூடிய இன்னுமொரு தீர்வு இராணுவத் தீர்வாகும் அதாவது இராணுவ பலத்தைக் கொண்டு போராளிகளை அடக்க வேண்டும் என்பது தான். இது இன வாதம் இன்றி வேறென்ன? அடக்கப்பட்ட இனமாயினும் மக்களாயினும் அவர்கள் அடக்குமுறைக்கு எதிராக நடாத்தும் போராட்டத்தில் பல தவறுகள் இருக்கலாம் ஆயினும் இத் தவறுதல்களுக்காக இப் போராட்டத்தைஇரத்த ஆற்றுள் அமுக்க வேண்டும் எனக் கூற முடியுமா.?

முதலாளித்துவத்தின் அடக்குமுறை உச்ச கட்டத்தில் இருந்ததாகவும் இவ் அடக்கு முறைகளைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையிலேயே இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி கிளர்ந்தெழுந்தனர் எனவும் 1971 ஏப்ரல் கிளர்ச்சி தொடர்பாக விஜேவீர கூறுகிறுர். அவருக்கு இக் கிளர்ச்சி நியாயமான தாகவும் விழா எடுத்து நினைவு கூறும் அளவிற்கு மகத்தானதாகவும் இருந்தது.

ஆனுல் வடகிழக்குத் தமிழ் இளைஞர்கள் முதலாளித்துவ ஆட்சியாளர்களின் அடக்கு முறைக்கு எதிராக ஆயுதம் ஏந்தி போராடிய போது அது விஜேவீரவிற்கு தண்டனைக்குரிய பெரும் குற்றமாகும், படு கொலையும் தேசத் துரோகமும் ஆகும். "இலங்கை வாழ் மக்களுக்கு ஓர் அறிவித்தல்" என்னும் தலைப்பில் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் "தனிநாடு கோரி போராடுபவர்கள் உண்மையிலேயே தண்டனைக்குரிய குற்ற வாளிகள் எனவும் அவர்களை அடக்கும்படியும்" கோரியிருந்தார்.
அடக்குமுறைக்க எதிராக சிங்கள இளைஞர்கள் கிளர்ந்தெழுந்த போது அது நீதியும் நியாயமும் கொண்டதாகவும், அடக்க முறைக்கு எதிராக தமிழ் மக்கள் கிளர்ந்தெழும் போது அது தண்டனைக்குரிய பாரதுரமான குற்றமும், படு கொலையும் தேசத்துரோகமும் ஆவது எந்த அடிப்படையில்? உள்ளது ஓர் அடிப்படைதான் சிங்களப் பேரினவாத அடிப்படை மட்டும்தான்.
தமிழ் மக்களது போராட்டத்திற்கு எதிரான தனது பேரினவாத தன்மைகளை மூடி மறைப்பதற்காக உண்மைக்குப் புறம்பான பலவித காரணங்கள் விஜேவீரவால் முன் வைக்கப்பட்டன. முதலாவதாக இப் போராட்டம் பூரண விடுதலையை முன் வைத்துள்ள சோஷலிச இயக்கம் அல்ல எனவும் நாட்டை துண்டாடுவதற்கான முதலாளித்துவ இனவாத இயக்கம் எனவும் விஜேவீர கூறினுர்.
வடகிழக்கின தமிழ் மக்கள் தேசிய அடக்கு முறைகளுக்கு எதிராக நடாத்தும் போராட்டம் தேசிய போராட்டமே தவிர சோஷலிச போராட்டம் அல்ல. அதனை சோஷலிசப் போராட்டமாக காண முயற்சிப்பது மாக்சிஸத்தின் அரிச்சுவட்டைக் கூட திரிவுபடுத்துவதாகும். தேசிய போராட்டத்தின் உள்ளடக்கம் நிச்சயமாக ஜனநாயகமே தவிர சோஷலிசம் அல்ல. அதனை சோஷலிசத்திற்கான போராட்டத்துடன் இணைப்பது வேறு பிரச்சனை. ஆனுல் அவ்வாறு இல்லை என்ற காரணத்திற்காக இப்

www.tamilarangam.net

போராட்டத்திற்கு எதிராக இருக்க முடியுமா? லெனின் இவ்வாறு கூறுகிறார். "பிரிந்து போகும் உரிமைக்கு நாம் ஆதரவு வழங்கும் போது ஒடுக்கப்பட்ட இனத்தின் பூர்ஷுவா தேசிய வாதத்திற்கு நாம் ஆதரவு வழங்குவதாக கூறப்படுகிறது. அப்படி அல்ல என்பதே எமது பதிலாகும். இப் பிரச்சனையில் "பிரயோக" பரிகாரம் முக்கியப்படுவது பூர்ஷுவாக்களுக்கேயாகும். தொழிலாளர்களைப் பொறுத்தவரை இரு போக்குக்களதும் மூலக் கோட்பாடுகளை பகுத்து அறிந்து கொள்வதே முக்கியமானதாகும். ஒடுக்கப்பட்ட இனத்தின் முதலாளித்துவ வர்க்கம் தம்மை ஒடுக்குபவர்களுக்கு எதிராக போராடும் வரையும் நாம் எப்பொழுதும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களுக்கு ஆதரவு அளிப்போம்.ஏனெனில் ஒடுக்கு முறைக்கு நாம் உறுதியானதும் நிலையானதுமான எதிரிகளாவோம்." (தேசியக் கொள்கையும் பாட்டாளி வர்க்க சர்வதேசியமும். சிங்களப் பதிப்பு 61ம் பக்கம்)

சோஷலிசம் என்ற பெயரில் ஜனநாயக வரம்புக்குட்பட்ட தேசிய இனப் பிரச்சனைக்கு இன வாத அடிப்படையில் எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் இருக்க வேண்டியது மாக்சிஸ்ட்டுக்களின் பக்கத்தில் அல்ல. கீழ்தர சந்தர்ப்பவாதிகளான புரோடன், கௌட்ஸ்கி, பரபெல்லும் (கார்ல்ரதெக்) ஆகியோரின் கும்பலிலாகும். விஜேவீர தனது கருத்தாக முன்வைக்கும் மாக்சிஸத்திற்கும் எவ்வித உறவும் இல்லை. (இது தொடர்பாக லெனின் "புரட்சிகர பாட்டாளி வர்க்கமும் இனங்களின் சுய நிர்ணய உரிமையும் என்ற கட்டுரையைப் பார்க்கவும்.)

தேசிய இனப் பிரச்சனைக்கு சோஷலிசம் மூலமே இறுதித் தீர்வு காணமுடியும் என விஜேவீர கூறுகிறார். எந்தவொரு மார்க்ஸ் வாதியும் இதை மறுக்க மாட்டார். அப்படியாயின் இதில் உள்ள முரண்பாடுதானென்ன? சோஷலிசத்தை கட்டி எழுப்பும் வரை இப் பிரச்சனையை பின்போட வேண்டியதுதானு? அது வரை காலமும் ஒடுக்கப்பட்ட இனம் தம்மீதான ஒடுக்கு முறையை தாங்கிக் கொள்ள வேண்டும்என்பதா? இது மாக்சிஸம் அல்ல. புரோடன் வாதம்,கௌட்ஸ்கி "பர பெல்லும்" வாதமாகும். இறுதியாக கூறுவதாயின் லெனினின் வார்த்தைகளின் படி வெறிகொண்ட பேரினவாதமாகும்.

முதலாளித்துவ அமைப்பின் கீழ் ஜனநாயகத்தை பூரணமாக வென்றெடுக்க முடியாது என்பதற்காக போராடவேண்டாம் எனக் கூறலாமா? அவ்வாருயின் நீதியானதும் நியாயமானதுமான தேர்தல் என்னும் கோஷத்தை முன்வைத்து இக்கோஷத்தின் அடிப்படையில் மக்களை அணிதிரளுமாறும் போர்களத்திற்கு வருமாறும் அறைகூவல் விடுப்பது எதற்காக?

இவ் விடயத்தை விளக்கிக்கொள்ள, இனங்களின் சுயநிர்ணய உரிமையை எதிர்த்ததோடு சோஷலிசத்தின் மூலமாகத்தான் இப் பிரச்சனையை தீர்க்கலாம் என பேருரைகள் நிகழ்த்திய "பாரபெல்லுவை" லெனின் எப்படி விமர்சனம் செய்தார் என்பதை மேற்கோள் காட்டுவது பொருத்தமானது. "ஜனநாயக வரம்புக்குட்பட்ட புரட்சிகர வேலைத்திட்டத்தைசோஷலிசம் என்ற பெயரால் நகைப்புரியதாக்கி அதனை நிராகரிப்பதையே "பரபெல்லும்" இன் பேச்சிலிருந்து காணக் கூடியதாயுள்ளது. அவர்கள் அவ்வாறு கூறுவது பிழையனதாகும். ஜனநாயக ரீதியாக அன்றி வேறு எந்தவொரு பாதை மூலமாகவும் பாட்டாளி வர்க்கத்திற்கு வெற்றியைப் பெறமுடியாது. ஜனநாயகத்தை

www.tamilarangam.net

பூரணமாக செயல்படுத்தும்படி மிகவும் திடசங்கற்பத்துடன் உருவாக்கப்பட்ட ஜனநாயக கோரிக்கைகளை பாட்டாளிவர்க்க போராட்டத்தின் ஒவ்வொரு படியுடனும் இணைப்பதைத் தவிர வெற்றிக்கு எந்தப் பாதையும் கிடையாது. சோஷலிசப் புரட்சியும் முதலாளித்துவ அமைப்புக்கு எதிரான புரட்சிகரப் போராட்டமும், ஜனநாயகத்தின் ஒரு பிரச்சனையான இன்றைய கால கட்டத்தின் தேசிய இனப்பிரச்சனையை முரணற்ற நிலையில் இருந்து கொண்டு சமர்ப்பிப்பது பகிடிக்குரியதாகும். நாம் முதலாளித்துவ அமைப்பு முறைக்கு எதிராக நடாத்தும் புராட்சிகரப் போராட்டத்தை எல்லா ஜனநாயக கோரிக்கைகளையும் அடிப்படையாகக் கொண்ட புரட்சிகர வேலைத் திட்டத்துடனும் உபாயங்களுடனும் இணைக்க வேண்டியுள்ளோம். குடியரசு, மக்கள் சேனை, சர்வசன வாக்குரிமை, இனங்களுக்கான சுயநிர்ணய உரிமை, ஆகியகோரிக்கைகள் உதாரணங்களாகும். விசேட நிலமைகளின கீழேயே இக்கோரிக்கைகளை முதலாளித்துவ அமைப்பில் நிறைவேற்றிக் கொள்ளமுடியும்.

இதுவும் கூட பூரணத்துவம் அற்றதும் திரிவ ,படுத்தப்பட்ட நிலையிலுமேயாகும். வென்றெடுத்த ஜனநாயக உரிமைகளை அடிப்படையாகக் கொண்டு அதன் பூரணத்துவம் அற்ற தன்மையை அம்பலப்படுத்தும் நாம் வெகு ஜனங்களின் ஏழ்மையை இல்லாதொழித்தல் எல்லாப் பகுதிகளிலும் செயல்படுத்துவதற்குமான இரு காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டு முதராளித்துவ அமைப்பை தகர்ததெறியும் படியும், முதலாளித்துவ முதலாளித்துவ வர்க்கத்தின் உடமைகளை கைப்பற்றும்படியும் கோர வேண்டியுள்ளோம். இச் சீர்திருத்தங்களில் முதலாளித்துவ அமைப்பு தகர்த்தெறியப்படுமுன்னரேயே ஆரம்பிக்கப்படும். சில அவ் அமைப்பு தகர்த்தெறியப்படும் போதும் இன்னும் சில அதற்குப்பின்னரும் ஆரம்பிக்கப்படும். சமூகப் புரட்சி ஒரு தனிப் போராட்டம் மட்டும் மல்ல. சமூகப் புரட்சி என்பது பொருளாதர ஜனநாயக சீர்திருத்தங்கள் தொடர்பான பிரச்சனைகளுடன் இணைந்துள்ள போராட்டக கோவையானது முதலாளித்துவ வர்க்கத்தின் உடைமைகளை கைப்பற்றுவதுடன் உச்ச நிலையை அடையும் கால கட்டத்தைக் கொண்டதாகும்.(கிழக்கு உலகின் தேசிய இயக்கங்கள், சிங்களப் பதிப்பு 144, 145ம் பக்கம்)

தேசிய இனப் பிரச்சனையையும் இனங்களின் சுய நிர்ணய உரிமையையும் சோஷலிசம் வரை பிற்போடும்படி கூறிய புரோடன் மார்க்ஸ் இனுல் கேலிக்கிடமாக்கப்பட்டதை லெனின் இவ்வாறு காட்டுகிறுர்.

"சமூகப் புரட்சியின் உடனடிப்பனிகளை பகுத்தாராயும்போது புரோடன் வாதிகள் தேசிய இனப் பிரச்சனையையும் தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமையையும் தவிர்த்துக் கொண்டனர். பிரான்சின் புரோதன் வாதத்தை எள்ளி நகையாடிய மார்க்ஸ், புரோடன் வாதத்திற்கும் வெறிகொண்ட பிரஞ்சு பேரின வாதத்திற்கும் இடையேயான நெருங்கிய தொடர்பை அம்பலப்படுத்தினுர். (பிரஞ்சு கனவான்கள் ஏழ்மையை இல்லாதொழிக்கும் வரை ஐரோப்பாவின் முழுப் பகுதியும் மௌனமாக உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். உட்கார்ந்து இருப்பவர்கள் தான் ...........தேசிய இனங்கள் துண்டிக்கப்படுவதையும் எடுத்துக்காட்டாக பிரஞ்சு அனைத்துள்

www.tamilarangam.net

உறிஞ்சிக்கொள்வதைப் பற்றியும் முற்றக எதுவுமே தெரியாதவாறு அங்கீகரிக்கும் சுபாவத்தை அவர்கள் காட்டினர். "(லெனின். அதேநூல் 146ம் பக்கம்)
தேசிய இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு தமிழ் மக்கள் சோஷலிசம் வரும் வரை பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதைத்தான் விஜேவீராவும் கூறுகிறுர். இவ்வாறு ஜனநாயகத்திற்கான போராட்டமான தமிழ் மக்களின் போராட்டத்தை எதிர்த்து தீர்வு சோஷலிசம் மூலம் மட்டுமே எனக் கூறி அதற்கு முன் ஏற்படும் ஒவ்வொன்றும் சோஷலிசம் அல்ல என அவற்றை எதிர்ப்பது தெளிவானது. முதலாளித்துவ அமைப்பின் கீழ் தேசிய இன அடக்குமுறைக்கு எதிராக நடாத்தும் போராட்டத்தை கைவிட்டு சோஷலிசத்துக்காக போராடும்படி கூறுவது ஆகும். இது தனது இனவாதத்தை சோஷலிச முகமூடிக்குள் மறைத்துக் கொள்வதாகும்.
தனது இனவாதத்தை மூடிமறைக்கும் நோக்குடன், தமிழ் மக்கள் இன அடக்கு முறைக்கு எதிராக நடாத்தும் போராட்டம் அமெரிக்க ஏகதிபத்தியத்தின் தேவைக்காக நடைபெறுகிறது என விஜேவீர கூறினுர்.
1986ம் ஆண்டு வெளியிடப்பட்ட "தமிழ் ஈழப் போராட்டத்திற்கு தீர்வு என்ன?" என்னும் விஜேவீரவின் நூலில் இந்தியாவைக் கவரப்போகும் நோக்கத்தைக் கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆரம்ப நடவடிக்கையே தமிழ் ஈழப் போராட்டம் எனக் கூறப்பட்டுள்ளது. அந் நூலில் இவ்வாறு கூறப்படுகிறது...
இலங்கையை இரண்டாகப் பிரித்தால், அவ்வாறு பிரிக்கப்பட்டு தமிழ் ஈழ அரசு ஒன்று அமைத்தால் அதன்மூலம் இந்தியாவைத் துண்டிக்கும் நோக்கம் கொண்ட ஐக்கிய அமெரிக்காவின் உபாயத்திற்கு பெரும் நன்மை பயக்கும். அண்டைய சிறுநாடான இலங்கையை இரண்டாகப் பிரிப்பது அதைவிட விசாலமான இந்தியாவில் இன,மதபிரதேச வேறுபாடு களுக்கு அமைய துண்டிக்கும் இயக்கமொன்றுக்கு பெரும் செல்வாக்கை ஏற்படுத்தும். இந்தியாவிலிருந்து உடைந்து பிரிந்து தமிழ் ஈழ அரசுடன் இணைந்து தமது இனத்தின் ஐக்கிய இராச்சியத்தை நிர்மாணிக்கும் ஆகக் குறைந்த மட்டத்திலிருந்து ஆரம்பித்து தமது மானிட இனத்தைச் சார்ந்த ஏனைய திராவிடர்களான கர்நாடகம், ஆந்திரா, கேரளம்ஆகிய மக்களுடன் ஒன்றுக் இணைந்து இந்தியாவிலிருந்து பிரிந்து திராவிட நாடுஅமைக்கும் தி.மு.க வின் செயல் திட்டத்தை நோக்கிச் செல்வதாகும். இதன் மூலம் தமிழ் நாட்டின் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் தென் இந்தியாவின் முதலாளித்துவ வர்க்கத்திற்கும் பெரும் சாதகமான நிலமை உருவாகும். இவ் இரு காரணங்களுக்காகவும் அமெரிக்க ஏகாதிபத்தியமும் விசேடமாக அதன் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் முன் பயணியான சி.ஐ.ஏ யும் இலங்கையில் ஈழம் இயக்கத்துக்கு துணையாக செயல் படுவது தெரிகிறது.(157ம் பக்கம்)
ஆனுல் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் அமெரிக்க ஏகாதி பத்தியத்தின் தேவைகளுக்காக நடைபெறுகிறது என்னும் கூற்று பிழையானது என்பது தெளிவான ஒன்றுகும். ஈழப் போராட்டத்தை அடக்குவதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது சகாக்கள் மூலமாக ஜயவர்த்தன அரசாங்கத்திற்கு பூரண ஆதரவை வழங்கியது. பிரித்தானிய தினிமினி கூலிப்பட்டாளம், இஸ்ரேல் மொசாட்

உளவு சேவை. பாகிஸ்தான் ஆகிய அனைத்தும் வடக்கின் போராட்டத்தை தகர்ப்பதற்காக ஜவர்த்தன அரசாங்கத்தின் இராணுவத்திற்கு பயிற்சி அளித்தது மட்டுமன்றி ஆலோசனைகளும் வழங்கின. அது மட்டுமன்றி இஸ்ரேல் விமான ஓட்டிகளை வழங்கியதாகக் கூட அறியப்பட்டது. இந்நிலையில் வடக்குப் போராட்டம் அமெரிக்காவின் தேவைகளுக்கு அமையநடைபெறுகிறது என்னும் பிரச்சாரம் செல்லாக்காசாகி விட்டது. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தேவைக்காக நடைபெறுவதாக கூறுவது மட்டுமன்றி தமது அரசியல் வகுப்புகளில் 11ம் நூற்றுண்டு சோழ சாம்ராச்சியத்தின் வரலாறு உரிமைகளை கோரும் இயக்கம் என கூறி வரலாற்று காலத்து முரண்பாடுகளை மீண்டும் கிளப்பி சிங்கள மக்கள் மத்தியில் எற்படுத்தப்பட்டுள்ள தமிழ் விரோதத்தை தென் இந்திய விரோதமாக உருவாக்க முயற்சி எடுக்கப்பட்டது. அமெரிக்காவின் தேவைகளுக்கு எதிராகவே இந்தியா இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையில் தலையிடுவதாக 1974ல் இருந்து அண்மைக்காலம் வரை மக்கள் விடுதலை முன்னணி இந்திய பற்றி கருத்துத் தெரிவித்தது.

அவ்வாறு கூறி அதிக காலம் செல்லவில்லை. அமெரிக்காவை மறந்து விட்டனர். அல்லது மறக்கப்பட்டது. அது வரைகாலமும் தாம் கொண்ட நிலைப்பாட்டிலிருந்து மாறி இப் போராட்டம் இந்தியாவின் தேவைகளுக்காக நடைபெறுவதாக மக்களுக்குக் கூறினர்.

தமது நோக்கங்களை ஈடேற்றிக் கொள்வதற்கு அமெரிக்க விரோதத்தை விட இந்திய விரோதம் கூடியபயன் கொண்டது என விஜேவீரவிற்கு தெளிவாக விளங்கியது. 1966 1971ன் பழைய நினைவுகள் மீண்டும் ஞாபகத்திற்கு வந்திருக்கலாம். அக் காலத்தில் இந்திய விரோதம் "போர்வீரர்களை"வழங்கிய நல்ல செழிப்பு நிலமாக இருந்தது. உடனேயே அவர் இந்தியவிரோதத்தை உயர்த்திப் பிடித்தார். இந்திய விரிவாதிக்கம், இந்திய ஏகாதிபத்தியமாக மேலுக்கு உயர்த்தப்பட்டது. தற்போது அவர் இந்திய ஏகாதிபத்தியமிடமிருந்து தாய் நாட்டை மீட்கும் போராட்டத்தின் "சுக்கான் இயக்கி."

விஜேவீரவின் புதிய கண்டு பிடிப்பின்படி தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தேவைகளுக்காக நடைபெறவில்லை. இந்தியாவின் தேவைக்காக நடைபெறுவதாகும். இது இந்திய இலங்கைக்கு எதிராக நடாத்தும் யுத்தம். 1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10ம் திகதி "ஜயவர்த்தன பிரபாகரன் துரோகிகள், இந்தியாவிற்காக எமது நாட்டில் இப்படிச் செய்தனரே" என்னும் தலைப்பில் மக்கள் விடுதலை முன்னணி வெளியிட்ட பிரசுரத்தில் "வடக்கில் நடைபெற்றது பிரிவினை போராட்டம் அல்ல. இலங்கை இந்திய யுத்தம்."

தமிழ் மக்களுக்கு தமிழ் ஈழம் என்னும் கானல் நீரைக்காண்பித்த பிரபாகரன் உண்மையிலே இவ் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் ராஜீவ் காந்தியால் நியமிக்கப்பட்ட சிப்பாய் மட்டுமே."

"இவ் உடன்படிக்கை மூலம் தமிழ் ஈழ பயங்கரவாதிகள் இந்திய மண்ணைப் பாவிக்கும் அனுமதி மறுக்கப்படுவதாகவும், இந்தியா விலிருந்து ஆயுதங்கள் கொண்டு வருவதை தடை செய்வதாகவும்,தமிழ் நாட்டிலிருந்து பயங்கரவாதிகள் அனைவரும் திருப்பி அனுப்புவதாகவும் ராஜீவ்காந்தி உடன்பட்டுள்ளார்.

www.tamilarangam.net

,திலிருந்து தெரிவது இதுவரை காலமும் பிரபாகரன் வாயிலாக தான் நடாத்திய யுத்தத்தை (தற்போது அவசியம் இல்லாத காரணத்தால்) நிறுத்துவது என்பதேயாகும்." எனக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு ஒன்றுக்கொன்று முற்றுக முரணுன கதைகளைக் கூறிக்கொண்டு மக்களை மட்டுமன்றி தமது அங்கத்த வர்களையும் ஏமாற்றும் விஜேவீரவிற்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் அவசியமானது தமிழ் மக்களது போராட்டத்தை எதிர்ப்பதும் அதன் மூலம் சிங்கள மக்கள் மத்தியிலே உறுதியான அத்திவாரத்தை இடுதலுமே ஆகும்.

மக்கள் விடுதலை முன்னணி பாட்டாளிவர்க்கத்தின் தலைமைக் கட்சியாயின் அவர்கள் செய்ய வேண்டி இருந்தது, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அல்லது இந்திய ஏக்திபத்தியத்தின் அடிவருடிகள் என நாமம் சூடி தமிழ் மக்களது போராட்டத்திற்கு சிறில் மத்தியூ, காமினிஈரியகொல்லை போன்ற கேவலமான இனவாதிகளையும் விட ஒருபடி முன்னுக்குப் பாய்ந்து சிங்கள மக்களைத் தூண்டுவது அல்ல. அல்லது போனுல் முதலாளித்துவ கட்சிகளைப் போன்று பதவி ஆசையுடன் செயல் படுவதும் அல்ல. போராட்டத்தில் பிழைகள் இருந்தால் அவற்றைச் சுட்டிக்காட்டி போராடும் சக்திகளை தவறற்ற பாதைக்கு அழைத்துச் செல்லலேயாகும். தமிழ் மக்களின தேசிய விடுதலைப் போராட்டத்தை சிங்கள தமிழ் இரு இனங்களினதும் ஒடுக்கப்பட்ட வெகு ஜனங்களின் பொதுப் போராட்டத்துடன் இணைக்க செயல் படுதலேயாகும்.

ஆனுல் அவ்வாறுசெயல்பட வேண்டிய தேவை இந்த மகத்தான "மாக்ஸ் வாதிக்கு", பாட்டாளி வர்க்கத்தின் தலைமைக் கட்சிக்கு அவசியமாய்ப் படவில்லை. இதற்குக் காரணம் அவர்கள் கொண்டிருந்த இன வாத அடிப்படையேயாகும்.

மாக்சிஸ்ட் லெனினிஸ்ட் விஜெவீர, பாட்டாளி வர்க்கத்தின் தலைமைக கட்சியான மக்கள் விடுதலை முன்னணி, தேசிய இனப் பிரச்சனை தொடர்பாக, ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டமான தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாக கொண்டிருந்த நிலைப்பாடு தெளிவானதே சோஷலிசம் என்னும் போர்வைக்குள் மறைந்திருந்த இனவாதமே தவிர வேறு எதுவும் அதற்குள் இல்லை. ஆகக் குறைந்தது இப்பிரச்சனையை ஜனநாயக ரீதியாக பார்க்கக் கூடிய லிபரல் முதலாளித்துவத்தின் நிலைப்பாடும் கூட மக்கள் விடுதலை முன்னணிக்க இருக்க வில்லை.

அதற்கு மிகவும் குறைவான அதிகாரங்களைக் கொண்ட மாகாண சபையைக் கூட மக்கள் விடுதலை முன்னணி எதிர்க்கிறது. அப்படியாயின் மக்கள் விடுதலை முன்னணியின் ஆட்சியில் தமிழ் மக்கள் பெற்றுக் கொள்ள "கொடுத்து வைத்தது" தான் என்ன? மக்கள் விடுதலை முன்னணியின் பிரதேச சயாட்சி தான் என்ன?

மாகாண சபை போன்ற மிகவும் வரம்புக்குட்பட்ட சுய நிர் வாகத்தை வழங்கு கின்ற ஆகக் குறைந்த தீர்வுக்கே எதிராயின் இதிலிருந்து நாம் காணக்கூடியது என்ன? மக்கள் விடுதலை முன்னணி தமது அரசியல் ஆதிக்கத்துள் தமிழ் மக்களை பலாத்காரமாக தடுத்து வைக்கும் தேவையையும், சிங்கள முதலாளித்துவ ஆட்சியாளர் செயற்பட்டவாறு செயல் படுவதற்கான அதன் தயார் நிலையையுமே காணமுடிகிறது.

**(தொடரும்)**

www.tamilarangam.net

# தமிழினத்தை தாக்குவதில் தர்மம் என்ன கண்டீர்

ஈழம் என்று அடி யெடுத்து
தோழர்களை தாக்கி வரும்
கோழைகளே! நீங்கள்! உங்கள்
மூளைகளை பேழைகளில் போக விட்டு
வேளையிது வென்று வேட்டுகளை வைப்பதென்ன.
காளைகளாய் காட்டு மிராண்டிகளாய்
எழைகளை ஈவுமின்றி ஏன் எதற்கு என்றுமின்றி
வாழையடி வாழையாய் வாழ்பவரை வாட்டி வதைக்கின்றீர்!
நாளையிது நியாயமென்று நவின்றிடுவர் என்றே நம்புகிறீர்!

மேளமதும் கொட்டி, மாலையணி தாலியையும் கட்டி
தாளமொடு நாடியதாய் நாதியுடை நல் குடும்பம்
வாழவொரு நாதியற்று வாழ்விழந்தும் வாழுகின்றார்.
தாளமதைப் போட்டு தமிழினத்தை தாக்குவதில் தர்மம்
என்ன கண்டோம்?

நாளடைந்து நாய்களைப்போல் நடுத்தெருவில்
நடைப்பிணமாய் நம்மினம்
பாழடைந்து போய்விடவோ பாடுபட்டு வந்தோம்!
தாழ் பணிந்து தாரணியில் தாயகத்தை தீண்டாமல்
தோள் தொடுத்து தோழமையாய் தோன்பு தரும் தமிழினம்.

வாள் எடுத்து வஞ்சகரை வீழ்த்தி வாழ்வதற்கு ஓரிடமாய்
ஈழ் அகத்தை ஈன்றெடுக்க ஈரணிகள் வேண்டாம்
ஆழ் கடலும் தாண்டி ஆட்சிதனை ஆட்டிடவும்
ஆள் நிறுத்தி ஆட்சி யொன்று ஆலமாய் அமைத்திடுவோம்!

சம்பு

www.tamilarangam.net

முகங்கள் (ஓவியர் மாற்கு)



இச் சஞ்சிகை கலை இலக்கிய மன்ற (கனடா) வெளியீடு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்